# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

பக்கங்கள் 24

06 ஜூலை 2019

புதுமை : 04 விதி : 161

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




## விடை பெறுகிறோம்

"பத்திரிகை நடத்துவது என்பது நெருப்பாற்றில் நீந்துவது போல..." என்பது தமிழறிஞர் சி.பா.ஆதித்தனார் உதிர்த்த வார்த்தைகள்.

நவீன தொடர்பு சாதனங்கள் - இணைய வளர்ச்சியின் வேகம் - பத்திரிகைகளை அச்சிட்டு வெளியிடுவதற்கான செலவுகளின் உச்சம் மறுபக்கம் என பத்திரிகைகள் தங்களைச் சுருக்கிக் கொள்ள ஆரம்பித்து - பயணத்தையும் இடைநிறுத்திக்கொள்வதும் அண்மைய வரலாறு.

மிகப்பெரும் நிறுவனங்களின் பத்திரிகைகளே அச்சிடல் செலவுகளை ஈடுசெய்ய அல்லாடும் இந்நேரத்தில் தொடர்ந்தும் வாசகர்களுக்கு எமது சேவையை வழங்குவதில் இடர்களை எதிர்நோக்க வேண்டியவர்களாக நிற்கிறோம். அச்சிடல் செலவு உச்சத்தை தொட்டபோதும்கூட குறைந்த விலையில் வாசகர்களை திருப்தி செய்த நாம் இனியும் தொடருவோம் என்றே நம்பினோம் - விரும்பினோம். ஆனால், எகிறும் செலவுகளை ஈடுசெய்ய முடியாத நிலையில் 'புதுவிதி' இந்த இதழுடன் தனது இடையறாத 3 ஆண்டுகள் பயணத்தை நிறைவு செய்கிறது.

இதுவரை காலமும் எமது பயணத்துடன் இணைந்து கொண்ட வாசகர்கள், படைப்பாளிகள், விளம்பரதாரர்கள், முகவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறும் அதேவேளை, சிரம்தாழ்ந்த மன்னிப்பையும் கோருகிறோம்.

# கந்தகம் சுமந்த உத்தமர்கள்




சிங்களம் ஏற்றுக்கொள்ளுமா சஜித்தை?



தன்னைத்தானே தரமிறக்கும் ஜனாதிபதி



காவிக்குள் திணறும் இலங்கை



எதிர்த்து நிற்பதே வாழ்க்கை...!



# தந்தையின் மேலாடைக்குள் 2 வயது மகளின் சடலம்...!

## உலகை உலுக்கிய படத்தின் பின்னணி



ஒவ்வொரு நாளும் உலகை உலுக்கும் ஒரு துயரச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் உள்ளன. சில சம்பவங்களை அங்கு நடந்த கதைகள் உணர்த்தும். ஆனால், சில சம்பவங்களுக்குக் கதைகள் தேவையில்லை வெறும் புகைப்படங்களே அங்குள்ள துயரத்தின் ஆழத்தை உணர்த்திவிடும்.

அப்படி, கடந்த 24 ஆம் திகதி வெளியான ஒரு புகைப்படம்தான் மொத்த உலகையும் ஆட்டுவித்துள்ளது. எல்சல்வடோரை சேர்ந்த ஒஸ்கர் அல்பெர்டோ என்னும் நபர் அமெரிக்காவில் குடியேறுவதற்கான கோரிக்கையை முன்வைத்தார். ஆனால், அவரது கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. அதனால் ஆற்றைக் கடந்து அமெரிக்காவுக்குள் நுழைவது என்ற முடிவை எடுத்துள்ளார்.

ஆற்றைக் கடக்கும்போது தன் குழந்தை தடுமாறி ஆற்றில் விழ, குழந்தையைக் காப்பாற்ற ஆற்றுக்குள் சென்ற ஒஸ்கர், குழந்தையைத் தனது மேலாடைக்குள் வைத்துக் கொண்டு நீந்த முயன்றிருக்கிறார். ஆனால், முடியாமல் போகவே இருவரின் உடல்களும் கரை ஒதுங்கின. தந்தையின் மேலாடைக்குள் இருக்கும் 2 வயது மகளின் கை தந்தையின் கழுத்தைச் சுற்றி இருக்கும் இந்தக் காட்சியைக் கண்ட பத்திரிகையாளர் ஜூலியா லி டக் தனது கமெராவில் படம் எடுத்தார். அவர் எடுத்த புகைப்படம் கடந்த திங்கள் கிழமை மெக்சிகன் பத்திரிகையில் வெளியானது.

புகைப்படம் வெளியான ஒரு மணி நேரத்தில் அது உலகம் முழுவதும் பரவியது. அந்தப் புகைப்படம், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மனிதாபிமானத்தின் அளவை வெளிப்படுத்துவதாக உள்ளது எனப் பலரும் விமர்சித்து வருகின்றனர். ‘அமெரிக்கா அமெரிக்கர்களுக்கு மட்டுமே”, என்பதுதான் ட்ரம்பின் பிரதான ஆயுதம். இதனால் பிற நாட்டினர் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழையக்கூடாது என்பதற்காக அமெரிக்கா - மெக்சிகோ எல்லையில் யாரும் கடக்க முடியாத வகையில் 670 மைல்‘ தூரத்துக்கு பிரமாண்ட சுவரை எழுப்ப முயன்றார். இதற்கு அமெரிக்காவுக்கு உள்ளிருந்தும் உலக நாடுகளிடம் இருந்தும் கண்டனங்கள் எழுந்தன. ஆனால், அவை எதுபற்றியும் அவர் கவலைப்படவில்லை. சுவர் கட்டுப் பணிகளை முடுக்கி விட்டார்.

இது ஒரு புறம் இருக்க, தினம் தினம் அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டுதான் உள்ளது. அவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த ட்ரம்ப் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தார். ஆனால் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன. இப்படி சட்ட விரோதமாகச் செல்லும்போது றியோ கிராண்ட் ஆற்றைக் கடக்க வேண்டும். உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் இந்த ஆற்றைக் கடக்கும்போது ஏற்படும் மரணங்கள் பல.

கடந்த ஆண்டில் மட்டும் மரணங்களின் எண்ணிக்கை 283 ஆக இருக்கிறது. இந்த ஆண்டு பலியானவர்களின் எண்ணிக்கை எதுவும் வெளியாகவில்லை.

இவ்வாறு ஆற்றைக் கடந்து அமெரிக்காவுக்குள் செல்ல முயன்ற ஆஸ்கர் என்பவரும், அவரின் 2 வயது மகள் வெலரியாவும்தான் தற்போது இறந்தார்கள். மத்திய அமெரிக்க நாடான எல் சல்வடோரின் தலைநகர், சான் சல்வடோரில் தன் மனைவி டனியா வனீசா, குழந்தை வெலரியா மற்றும் தாய் ரோசா ராமிர்ரெஸூடன் வாழ்ந்து வந்தவர் 25 வயதான ஒஸ்கர் அல்பர்டோ மோர்டினெஸ். இவர் அங்குள்ள ஒரு பீட்ஸா கடையில் வேலை செய்துவருகிறார். அவருக்கு மாதம் 350 அமெரிக்க டொலர்கள் சம்பளம். நம் நாட்டு மதிப்பில் 61 ஆயிரம் ரூபாய்.

ஒஸ்கரின் மனைவி டனியா, சான் சல்வடோரில் உள்ள ஒரு சீன உணவகத்தில் வேலை செய்கிறார். இந்த நான்கு பேரும் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட ஒரு வாடகை வீட்டில் வாழ்ந்து வந்துள்ளனர். ஒஸ்கருக்கு சொந்த வீடு கட்ட வேண்டும், தன் மகளை நன்றாக வளர்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. தான் அமெரிக்காவுக்குச் சென்றால் அங்கு சில காலங்கள் தங்கி சம்பாதிக்கும் பணத்தை வைத்து புதிய வீடு கட்டலாம் என முடிவெடுத்து அமெரிக்காவுக்கு செல்ல அனுமதி கோரியுள்ளார்.

ஆனால், ஒஸ்கரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. எப்படியேனும் அமெரிக்காவில் நுழைந்து, நிறைய சம்பாதித்து வாழ்க்கையில் முன்னேறிவிட வேண்டும் என்ற கனவில், குழந்தை, மனைவி மற்றும் மனைவியின் தாய் ஆகியோருடன் மெக்ஸிகோவிலிருந்து டெக்ஸாஸ் வழியாகச் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குச் செல்ல முடிவெடுத்துப் புறப்படுகிறார்கள். ஒஸ்கரின் குடும்பம் றியோ கிராண்ட் ஆற்றுக்கு அருகில் வந்ததும் முதலில் ஒவ்வொருவராக ஆற்றைக் கடக்கலாம் என நினைத்து முதலில் மகளும், தந்தையும் ஆற்றைக் கடக்கின்றனர். அவர்கள் இருவரும் ஆபத்தான ஆற்றை வெற்றிகரமாகக் கடந்து வந்துவிட்டனர்.

பின்னர், ஒஸ்கர் தன் மகளைக் கரையில் விட்டுவிட்டு மறு முனையில் இருக்கும் மனைவியை அழைத்துச் செல்வதற்காக மீண்டும் ஆற்றில் இறங்குகிறார். ஒஸ்கர், ஆற்றில் இறங்கி சிறிது தூரம் சென்றதும் தந்தையைப் பார்த்த மகளும் ஆற்றில் இறங்குவதற்காக வேகமாக வந்துள்ளார். பின்னர் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மகளை நோக்கி ஓடுகிறார் ஒஸ்கர். அதற்குள் குழந்தை தடுமாறி ஆற்றில் விழுகிறது. காப்பாற்றச் சென்ற தந்தை குழந்தையை எடுத்து தன் மேலாடைக்குள் வைத்துக்கொண்டு நீந்த முயற்சி செய்துள்ளார். அது முடியாமல் போகவே இறுதியில் இருவரது உடல்களும் கரையில் ஒதுங்கின என அமெரிக்க ஊடகங்களில் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த டனியா வனீசாவின் தாய், ‘ஆற்றைக் கடப்பது ஆபத்தானது என நாங்கள் பலமுறை கூறினோம். ஆனால், ஒஸ்கர் அதை ஏற்கவில்லை. அவர்கள் வெற்றிகரமாக ஆற்றைக் கடந்த பிறகுதான் இந்தக் கொடுமையான சம்பவம் நடந்தது என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. கணவனும், மகளும் நீரில் மூழ்குவதைப் பார்த்த கண்டு என் மகள் கூச்சல் போட்டாள். அவளும் தண்ணீரில் இறங்கிவிட்டாள் அதற்குள் அருகில் இருந்தவர்கள் டனியாவைக் காப்பாற்றிவிட்டனர். இல்லை என்றால் இப்போது அவளும் தன் கணவருடன் இறந்திருப்பாள்” எனத் தெரிவித்தார்.

இதில் இன்னும் மனதை உருக்கும் சம்பவம் ஒஸ்கரின் தாய் ரோசா ஆங்கில ஊடகமான ஏ.பி-க்கு அளித்த பேட்டிதான். அவர், குழந்தை வெலரியாவின் விளையாட்டுப் பொருள்களைக் காட்டி மிகவும் வருத்தத்தோடு பேசியுள்ளார். அதில், ‘ஒஸ்கர் தன் விருப்பை என்னிடம் கூறியபோதே போகவேண்டாம் எனக் கெஞ்சினேன். ஆனால், அமெரிக்காவுக்குச் சென்று பணம் சம்பாதித்து வீடு கட்ட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் அவர் இருந்துவிட்டான்.

நான் மீண்டும் ஆஸ்கரிடம் கூறினேன், உனக்குப் போக வேண்டும் எனத் தோன்றினால் நீயும் உன் மனைவியும் மட்டும் செல்லுங்கள். குழந்தையை என்னிடம் விடுங்கள் நான் பார்த்துக்கொள்கிறேன்” என்றேன். ஆனால் அவன், ‘இல்லை அம்மா. நான் எப்படி அவளை விட்டுச் செல்வேன் என நீங்கள் நினைத்தீர்கள்?” எனக் கேட்டான். தன் மகளை விட்டுச் செல்வதற்கான தைரியம் அவனிடம் இல்லை. அவன் இறந்த புகைப்படத்தைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியும். ஒஸ்கர் தன் மகளை எவ்வளவு நேசித்தான் என்பது தெரியும்” எனக் கூறினார் கண்ணீருடன்.

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 04 06 ஜூலை 2019 விதி : 161

# போதை ஒழிக்கும் நாட்டில் சாராயத்துடன் கசிப்புப் போட்டி

கடந்த 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை போதை ஒழிப்பு தின மாதம் பிரகடனப்படுத்தியதையடுத்து இலங்கையில் அன்றிலிருந்து ஒரு வார காலத்துக்கு போதை ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி பிரசாரங்கள், சுவரொட்டிகள், கலந்துரையாடல்கள் வீதி நாடகங்கள் எனப் பெரும் பொருட் செலவில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போதையற்ற நாடாக உருவாக்கப் போவதாகக் கங்கணம் கட்டியுள்ளார். போதைவஸ்து வர்த்தகம் காரணமாக மரணதண்டனையை நிறைவேற்றக் கையெழுத்து வைத்து விட்டதாகவும் போதை ஒழிப்பு வாரத்தினை அறிவித்து விட்டார். எவ்வளவு பெரும் எதிர்ப்புகள் வந்தாலும் மரணதண்டனையை நிறைவேற்றுவதில் பின்வாங்கப் போவதில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதி போதை ஒழிப்பில் தீவிரம் காட்ட இலங்கையில் போதை வஸ்து பாவனை அதிகரித்திருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. அதிலும் இங்கு பாவிக்கப்படும் மதுபானங்களும் 40 வீதம் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்படும் கசிப்பு என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கசிப்பை ஒழிப்பதற்கு இரு பிரசார இயக்கம் நடத்தப்படுமென என ஒரு அரசியல்வாதியிடம் கேட்ட போது அதை நிறுத்தினால் கொழும்பில் எப்படி அரசியல் கட்சிகள் பெரும் ஊர்வலங்களை நடத்த முடியுமெனக் கேள்வி எழுப்பினார். எல்லோருக்கும் சாராயம் கொடுக்க பெருந்தொகை பணம் வேண்டுமாதலால் கசிப்பு அவசியம் எனவும் குறிப்பிட்டார். சாராய உற்பத்தி விற்பனை என்பவற்றால் அரசுக்கு வரியாகப் பெருந்தொகை கிடைக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மரண தண்டனை ஒழிப்புக்கு மைத்திரி - மகிந்த ஆதரவு



இலங்கையில் மரணதண்டனை நிறைவேற்றுவது என்ற ஜனாதிபதி மைத்திரிபாலவின் முடிவுக்கு பிரிட்டன், பிரான்ஸ்,நோர்வே. உட்படப் பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால் ஜனாதிபதி மரணதண்டனை நிறைவேற்றுவதில் உறுதியாகவுள்ளார்.

ஆனால் 2018 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் மரணதண்டனைக்கு எதிரான தீர்மானத்துக்கு இலங்கை ஆதரவு வழங்கியிருந்தது. அக்காலப்பகுதியில் மைத்திரி இலங்கையில் மரணதண்டனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஐ.நா. சபையில் 2 வருடங்களுக்கு ஒரு முறை மரணதண்டனை ஒழிப்புப் பிரேரணை கொண்டு வரப்படுவதுண்டு. 2018 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டபோது இலங்கை ஆதரவு வழங்கியது. அப்போது மைத்திரி ஜனாதிபதியாகவும், மஹிந்த பிரதமராகவும் இருந்தனர்.

இதுபற்றி ஒரு சிங்கள அரசியல்வாதியிடம் கேட்ட போது அவர் தாங்கள் இலங்கையின் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்த போதிலும் அதை நிறைவேற்றவில்லை என்றும் அவ்வாறே மரணதண்டனை ஒழிப்புக்கு ஆதரவளித்து விட்டு அதை இங்கு நிறைவேற்றப்போவதாகவும் தெரிவித்தார்.

உள்ளொன்று வைத்துப்
புறமொன்று பேசுவோர்
உறவு கலவாமை வேண்டும்



# திரிபீடகம் நிராகரிக்கப்படுமா?

## பௌத்த மக்கள் அச்சம்

புத்த பெருமான் 10 வருடங்கள் போதிமரத்தின் கீழ் தங்கியிருந்து ஞானம் பெற்றாராம். 10 வருடங்கள் மௌனம் காத்த அவர் வாய் சிறந்து முதலில் பேசிய வார்த்தைகள் ஆசையே சகல பாவங்களுக்கும் காரணமாகிறது என்பதுதான். ஆசை, காமம், குரோதம், கொலை, களவு, வெறுப்பு, வஞ்சகம் இவை அகற்றப்பட்டாலே மனிதமனம் புனிதமடையும் என்பதை புத்தர் ஊர் ஊராகச் சென்று மக்களிடம் தன்னைப் பின்பற்றிய சிஷ்யர்களிடமும் போதித்தார். அதுவே திரிபீடமாகத் தொகுக்கப்பட்டு பௌத்த மக்களின் வேதமாகப் போற்றப்படுகிறது.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திரிபீடகத்தை தேசிய மரபுரிமைச் சொத்தாகப் பிரகடனம் செய்ததுடன் அதை உலக மரபுரிமை சொத்தாக அங்கீகரிக்க வைக்க ஐ.நா. சபையில் பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறார். ஜனாதிபதியின் இந்த முயற்சிக்கு ஆபத்து வரக் கூடிய ஒரு சூழல் ஏற்படும் போல் தெரிகிறது. இலங்கையில் முக்கிய மதபீடங்களின் ஒன்றான அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர்களில் ஒருவரான ஞானரத்ன தேரர் மருத்துவர் சர்பி போன்றவர்களைக் கல்லெறிந்து கொல்வது என்பது முஸ்லிம்களின் ஷரி ஆ சட்டத்துக்கு உட்பட்டது.

கொலை, குரோதம் என்பவற்றை எதிர்க்கும் திரிபீடகத்தை நிராகரித்து விட்டு தேரர்கள் ஷரி ஆ சட்டத்தை பௌத்த மதக் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளப் போகிறார்களா என்ற சந்தேகம் சிலருக்கு எழுந்துள்ளது.

தலையில் உள்ள மயிரை அகற்றினால் போதாது தலைக்குள் உள்ள கொலை வெறியையும் அகற்ற வேண்டுமென அவர்கள் ஆதங்கப்பட்டனர்.

மழித்தலும் நீட்டலும்
வேண்டாம் உலகம்
பழித்தது அழித்து விடில்

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்



















சோகம் தனிமையில் கூட
வரும் ஆனால்
உண்மையான சந்தோஷம்
அன்பானவர்கள்
இருக்கும்போது மட்டுமே வரும்,,,,!












புதுவீதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் ; 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## தானைத் தலைவனும் கையாலாக தலைவனும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் மீது போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. தமிழ் மக்கள் தங்கள் மனதில் தலைவனாகப் வைத்துப் பூசிக்கும் ஓர் உன்னத தலைவனின் புகழுக்கு மாசு கற்பிக்கும் விதத்தில் அவரின் பேச்சு அமைந்தது. விடுதலைப் புலிகளின் எதிர்த்துப் போரிட்ட இராணுவத்தினர் புலிகள் எப்படிப்பட்டவர்களின் அவர்களின் ஒழுக்கம் எத்தகையது என்பது நன்கு தெரியும். இது குறித்து முன்னர், மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவும், இப்போது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் கூறிய கருத்துக்கள் ஆதாரம்.

விடுதலைப் புலிகள் மீது எதிரிகள் அவ்வளவும் ஏன் துரோகிகள் கூட முன்வைக்கத் தயங்கும் குற்றச்சாட்டுக்களை மைத்திரி சர்வசாதாரணமாக முன்வைத்துள்ளார். இது அவரின் கையாலகத்தனத்தின் பண்பு என்றே கூறமுடியும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, லஞ்சம், ஊழல் ஒழிப்புக் குறித்தே அதிகம் பேசினார். ஆனால், ஏனையோரின் ஆட்சிக் காலத்தை விட இவரின் ஆட்சிக்காலத்திலேயே லஞ்சமும் ஊழலும் புரையோடிப் போயின.

இவ்வளவுக்கும் இலங்கையில் நடக்கும் போதைப் பொருள் கடத்தல், விற்பனை போன்ற குற்றச்செயல்களின் பின்னணியில் இருப்பவர்கள் அரசியல்வாதிகளே அல்லது இந்தக் குற்றங்களை பாதுகாக்கும் அதிகாரத் தரப்புகளாக அரசியல்வாதிகளே உள்ளார்கள். அதுவும் இந்த அரசியல்வாதிகள் அதிகம் இருப்பது ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே. துமிந்த சில்வா போன்றவர்களை உதாரணமாக சுட்டமுடியும். துமிந்த சில்வா தண்டிக்கப்பட்டபோதும் பல அரசியல்வாதிகள் இன்னமும் தண்டனையிலிருந்து மட்டுமல்ல சட்டத்தின் முன்னிருந்துகூட தப்பிச் சுதந்திரமாக தொழில்களை தொடர்கிறார்கள்.

லஞ்சம், ஊழலை ஒழிக்க முடியாத மைத்திரி, லஞ்சம், ஊழல் மட்டுமல்ல சமூகப் பிறழ்வுகள் இல்லாத தேசத்தை உருவாக்கி சுயபொருளாதாரத்தை வளர்த்து அந்தத் தேசத்தை முன்னேற்றிய தலைவர் ஒருவர் மீது இவ்வாறான குற்றச்சாட்டை நயவஞ்சகத்தனமாக சுமத்தியுள்ளார். இது அவரின் அறிவு - ஆட்சித் திறத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. தமிழரின் போராட்டத்தை நடத்துவதற்கு புலிகளுக்காக மக்கள் எவ்வளவு அர்ப்பணிப்புடன் நடந்து கொண்டார்கள் என்பது தமிழ் மக்களுக்கு தெரியும்.

தமிழீழ மீட்புநிதிக் கடன் என்ற பெயரில் புலிகள் தங்கம் வாங்கிய போது ஏராளமானவர்கள் தாமாகவே முன்வந்து உதவின்ர். இவ்வளவு ஏன் மாவீரர்களின் பெற்றோரிடம் பவுண் வாங்க மறுத்த புலிகளின் உயர்பீடத்தினருக்கு தாமாகவே தேடிச் சென்று தங்கத்தை வழங்கியருந்தனர் மாவீரர்களின் பெற்றோர். இதேபோன்று புலம்பெயர்ந்த மக்கள் பனியிலும் - வெயிலிலும் - மழையிலும் தம்மை உருக்கி தமிழர் தேசம் உருவாக வேண்டும் என்ற அவாவில் பல கோடி ரூபாய்களை வாரிக் கொடுத்திருந்தார்கள். இவை தவிர, புலிகள் உள்நாட்டிலும் - வெளிநாடுகளிலும் நிறுவிய பெரு வணிக நிலையங்கள் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்கள் மூலம் நிதி திரட்டப்பட்டன. மேலும் போருக்காக இராணுவம் செலவு செய்த தொகையில் 5 வீதத் தொகையைக்கூட செலவு செய்ததில்லை. இவ்வாறான நிலையில் மைத்திரியையும் அவரின் கருத்துக்களையும் என்னவென்று சொல்வது?

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 58

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

குளித்து விட்டு வருவதற்காக குளிக்குமிடம் நோக்கிப்போனேன். அங்கும் வரிசை. அமளிதுமளி. மெல்ல முன்னே சென்று

'பிள்ளைக்கு காய்ச்சல். தண்ணீர் பிடிக்க விடுவீங்களா? " எனக் கேட்டேன்.

அங்கு நின்ற கலகலத்தான் ஒன்று கத்தத்தொடங்கியது, 'ரீச்சரை முன்னுக்கு விடுங்கோ. வாங்கோ வாங்கோ...", வரவேற்பும் வணக்கமும். என உதவ மனமற்றவர்களையும் மகிழ்ச்சிகரமான மனநிலையாக்கி எனக்கு தண்ணீர் எடுக்க உதவினாள்.

நடைமுறையில் எல்லோர்க்கும் சமநீதி என கருதும் மனோபாவத்தால் விசேடித்த சலுகை பெறாமல் வரிசை. ஒழுங்கு என நடந்து கொண்டதால் அவர்களில் பலருக்கு என்னைப் பிடித்திருக்கலாம். அத்தோடு இரவு நேரங்களில் பிள்ளைகள் எங்கள் தறப்பாள் கூடார மின்குமிழில் கூடிப் படிப்பதும் அவர்களுக்கு நான் படிப்பிப்பதாலும் கிடைத்த மரியாதை உணர்வாகவும் இருக்கலாம். சிலர் எனது கைக்குழந்தை மகளை பொம்மைக்குட்டிபோல தூக்கி கொஞ்சும் செல்லத்தனத்திலும் அந்த புரிதல் வந்திருக்கலாம்.

எது எப்படியோ குளிப்பதற்கு தண்ணீர் பிடிக்க விட்டார்களே. அவர்களுக்கு நன்றி கூறினேன்.

'ரீச்சர். நன்றியை வைக்கிறதுக்கு பொக்கற் இல்லை. குறுக்கு கட்டுக்க வைக்கட்டுமோ?", அதில் நின்ற கலகலத்தான் கலகலத்தது.

நான் உதட்டைக்குவித்து மெல்லிதாக சிரித்தேன். 'அட பார்டா... ரீச்சர்ட சிரிப்பும் அழகு தான்", என வம்புக்கு ரகளை செய்தாள்.

எல்லோரும் சிரித்தார்கள். நானும் சிரித்துக்கொண்டேன். அந்த இடத்தை அந்தப்பெண் அழகாக்கிக் கொண்டிருந்தாள்.

காலையில் இருந்து மருத்துவமனை என அலைந்த களைப்பை அவளது கலகலப்பும் குளிர்ந்த நீரின் தகதகப்பும் இல்லாது செய்தது. மனம் புத்துணர்ச்சி பெற்றது. இரவு ஏழு முப்பதைத் தொட்டுக் கொண்டிருந்தது. குழந்தை எழும்பவில்லை. தேநீர் தயாரித்து குடித்துக்கொண்டு குழந்தைக்கும் பால்மா கரைத்துப் பருக்கினேன்.

காய்ச்சல் விடவில்லை. மருந்தை கரைப்பதற்கு தயாரானபோது, தோழியும் மாமியாரும் வந்தனர். குழந்தைக்கு மருந்தெடுக்கப் போன விடயம் அவர்களுக்கு தெரியும். அவர்கள் வேறு ஒரு அலுவலாக ஓடித் திரிவதை உணர முடிந்தது. மனிதர்கள் பக்கத்தில் இருந்தாலும் மனங்கள் சிலவேளை தூரமாகவே இருந்து விடுகின்றன. ஏதோ ஒன்றை என்னிடம் மறைப்பதை உணர்ந்தேன். கேட்கவில்லை. கேட்பது நாகரிகமாகவும் படவில்லை.

'குழந்தைக்கு சிரப் தராமல் குளிசைகள் தந்திருக்கிறார்கள். வந்தவுடனே மருந்து பருக்கினேன். காய்ச்சலும் விடேல்லை. கண்ணும் திறக்கிறாளில்லை. காய்ச்சல் என்றால் கண் திறக்காயினமோ?", என நண்பியிடம் கேட்டேன்.

'என்ன பச்சைப்பாலனுக்கு குளிசை தந்தவையோ? என்னென்ன குளிசை?, என தோழி கேட்டாள்.

"பனடோலும் ப்ளுமன் குளிசையும். ப்ளுமன் குளிசையை எட்டில் ஒரு பங்காக கொடுக்க சொன்னவை."

" கடவுளே! ப்ளுமன் குளிசையை பெரியாக்கள் போட்டாலே தலைக்க ஏதோ செய்யும். குழந்தைக்கு தந்திருக்கிறார்களே. இனி அதைக் குடுக்க வேண்டாம்." ,என்றாள்.

அவள் ஒரு தாதி தான். பதுங்குகுழிக்குள் வைத்து பிரசவம் பார்த்த தாதி. அடுத்தநாள் காலையும் குழந்தை கண்விழிக்கவில்லை.

மீண்டும் வைத்தியசாலை போனேன். நேராக மருந்து வழங்கும் இடத்திற்குப் போனேன். தெரிந்த தாதிப்பெண் வந்திருந்தாள். அவளிடம் நேற்று எடுத்த சிட்டையை எடுத்துத் தர கேட்டேன். பெரிய காட்போட் மட்டை பெட்டியை தூக்கித் தந்தாள் தேடி எடுக்குமாறு. தேடல் தேடல் தேடல்...

கிடைத்தது. அதையும் கொண்டு வரிசையில் நிற்காமல் இடையால் புகுந்து மருத்துவர் ஒருவரை அணுகினேன். குழந்தைக்கு மாத்திரைகளை மாறித்தந்த விடயத்தை முறையிட்டேன். அப்படித் தந்திருக்க வாய்ப்பில்லை என்றே அந்த மருத்துவர் வாதிட்டார்.

'போரின் பிடியில் இருந்து நோயாலும் மனதாலும் நொந்த மனிதர்களை இறைவனுக்கு சமமான தொழிலை செய்யும் மருத்துவர்கள் வேணுமென்றே சாகடிக்கிறீர்களா?", எனக் கேட்டேன்.

'நேற்று நாங்கள் இப்படியான மருந்தைத் தந்திருக்க மாட்டோம்", என வைத்தியர் வாதிட்டார்.

நேற்று தந்த மருந்துச்சிட்டையை அவர் முன்னே நீட்டினேன். வாயடைத்துப்போனார்.

'தவறான மருந்து", அவர் வாய் விட்டுச் சொன்னார். நான் மருந்தெடுக்காமலே அந்த இடத்தை விட்டு வெளியேறினேன்.

தாதிப்பெண் ஒருத்தி வந்து மருந்தெடுத்து செல்லுமாறு பணித்தாள்.

'வேண்டாம்", என்று மறுத்து தறப்பாள் கூடாரத்தை நோக்கி நடந்தேன். எனது கைப்பையுள் தெரிந்த அந்த தாதிப்பெண் சிட்டை எடுக்க உதவிய தாதிப்பெண் தந்த பனடோல் சிரப்பும், பிறிட்டோன் சிரப்பும் காய்ச்சல், வயிற்றோட்டம் வந்தால் பாவிக்கக்கூடிய மருந்துகளும் இருந்தன. அதற்காக அவள் என்னிடம் எந்தக் கையூட்டும் பெறவில்லை. மனிதம் இருந்தது அவளிடம். ஏனெனில் அவள் என்னைப்போல தமிழிச்சியாக இருந்ததால்.

தற்காலிக மருத்துவமனையிலிருந்து எனது கூடாரத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தேன்.

(சாட்சியம் நீளும்)

# தன்னைத்தானே தரமிறக்கும் ஜனாதிபதி

யோகநாராயணன்



இலங்கையில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் ஒருவர் மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதமர் நாடாளுமன்ற உறுப்பனர்கள் என எவரையும் விட நிறைவேற்று அதிகாரம் உட்படக் கூடிய அதிகாரங்களைக் கொண்ட ஒருவராக விளங்கி வருகின்றார். அதேவேளையில் அவரே நாட்டின் அதிபராகவும், இலங்கையை உலக அரங்கில் பிரதிநிதித்துவம் செய்யும் தலைவராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் பொறுத்தவரையில் 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்தபோது ஒரு வீரநாயகனாகவே பார்க்கப்பட்டார். ராஜபக்ஷ சகோதரர்களின் சர்வாதிகார ஆட்சிக்கெதிராகக் களமிறங்கியபோது அவருக்கு உயிராபத்து ஏற்படக்கூடிய சூழல் நிலவியதாக அவரே ஒரு முறை குறிப்பிட்டிருந்தார். தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு எதிராகதக் கொடிய அடக்குமுறைகளை மேற்கொண்டும் வன்முறைகளைத் தடுத்து நிறுத்தாமலும் செயற்பட்ட காரணத்தால் சிறுபான்மை

மக்கள் ராஜபக்ஷ ஆட்சியை முற்றாகவே வெறுத்தனர். எனவே சிறுபான்மை மக்களின் முழுமையான ஆதரவைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் என்ற பெருமையும் இவருக்குண்டு. எனவே ஒடுக்கப்படும் விவசாயிகள் உட்பட சிங்கள மக்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக மக்கள் இவரை ஒரு வீரநாயகனாக எதிர்பார்த்தனர்.

ஆனால்,மக்களின் எதிர்பார்ப்புகளை விட்டு மெல்ல மெல்ல விலகிச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018 ஒக்ரோபர் மாதத்தில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலம் தொடர்ந்து தோல்விகளையும் சந்திப்பவராகத் தன்னைத் தானே தரமிறக்கிக் கொள்ள ஆரம்பித்தார்.

அவர் அரசாங்கத்தை விட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெளியேற்றியதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் இணைந்து ஏற்படுத்திய நல்லிணக்க அரசாங்கத்துக்கான மக்கள் வழங்கிய ஆணையை உதாசீனம் செய்தார்.

இதையடுத்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்து மஹிந்த ராஜபுக்ஷவைப் பிரதமராக நியமித்தமையும் முன்னைய அமைச்சரவை கலைக்கப்பட்டு புதிய அமைச்சரவையும் உருவாக்கப்பட்டது. அதன் காரணமாக நாடாளுமன்றமே ரணகளமானதை நாமறிவோம். அடுத்து நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டது.

இந் நடவடிக்கைகள் அரசியலமைப்புக்கு விரோதமானவையெனத் தீர்ப்பு வழங்கியதன் மூலம் மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றி அமைச்சரவையை ஏற்படுத்தியது.

ஜனாதிபதியின் நடவடிக்கைகள் உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட நிலையில் அவர் மூக்குடைபபட்டு தன்னைத்தானே அரசியலமைப்புக்கு முரணாகச் செயற்படுபவர் என்ற நிலைக்குத் தரமிறங்கிக் கொண்டார். அவரின் இந்த நடவடிக்கைகள் முற்றாகவே தோற்கடிக்கப்பட்டன. எனினும் அவர் பிரதமருடனும் அமைச்சரவையுடனும் முரண்படும் போக்கைத் தொடர்ந்து வந்தார். அவ்வகையில் பாதுகாப்பு அமைச்சரைத் தன் வசம் எடுத்துக் கொண்டார். இவற்றின் காரணமாக அமைச்சரவைக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான அதிகாரப் போட்டி உச்சம் பெற்றது.

இப்படியான நிலையில் எமது நாட்டை மட்டுமின்றி சர்வதேசத்தையே உலுக்கிப் போட்ட ஏப்ரல் 21 குண்டுவெடிப்பில் 250 இற்கும் மேற்பட்ட உயிர்கள் பலி கொள்ளப்பட்டு, 500 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்த ஒரு பேரவலம் ஏற்பட்டது. இதைத் தடுத்திருக்கக்கூடிய வாய்ப்புகள் இருந்தும் அதைத் தவிர்க்க முடியாமல் போனமைக்கு பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையேயிருந்த அதிகாரப் போட்டியில் சில அதிகாரிகள் செய்வதறியாத நிலையில் திக்கிமுக்காடியமையே காரணம் எனவும் சில கருத்துக்கள் உண்டு. எப்படியிருப்பினும் தற்சமயம் முன்னாள் பாதுகாப்பு செயலரும் கட்டாய லீவில் அனுப்பப்பட்ட பொலிஸ்மா அதிபரும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இப்படியான ஒரு நிலைய்ிலும் ஜனாதிபதி மேற்கொள்ளும் சில காரியங்கள் வியப்புக்குரியனவாகவும், தன்னைத் தறமிறக்கும் வகையிலும் அமைந்தன. ஏப்ரல் 21 சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய நாடாளுமன்றத்தால் ஒரு தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. அதில் ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் பாதுகாப்பு செயலர், கட்டாய லீவில் அனுப்பப்பட்ட பொலிஸ்மா அதிபர் ஆகியோர் சாட்சியமளித்திருந்தனர்.

இதேவேளையில் ஜனாதிபதி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை உடன் நிறத்தப்பட வேண்டுமெனவும் அதில் அரசாங்க அதிகாரிகள் எவரும் சாட்சியமளிக்கக் கூடாதெனவும் கட்டளையிட்டார். இக்கட்டளையை நிறைவேற்றாவிடில் அமைச்சரவையைக் கூட்டாமல் அரசாங்க நடவடிக்கைகளை முடக்கப் போவதாக மிரட்டினார். ஒரு அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படவில்லை. இது அரசியலமைப்புக்கு விரோதமான நடவடிக்கை என்று சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் பிரமருடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து மீண்டும் அமைச்சரவை கூட்டப்பட்டது. அரசாங்க அதிகாரிகள் தொடர்ந்து சாட்சியமளித்து வருகின்றனர்.

ஒரு நாட்டின் தலைவர் கட்டளையிடும் போது அமைச்சரவையும் அரசாங்க அதிகாரிகளும் அதை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் பின்பு ஜனாதிபதி தனது நிலைப்பாட்டிலிருந்து பின் வாங்குவதும் இவர் தன்னைத்தானே தரமிறக்கிக் கொண்ட ஒரு முன்யோசனையற்ற செயலரும் அதாவது நிறைவேற்று அதிகாரத்தைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தி அவர் மூக்குடைபட்டுள்ளார்.

இவரின் அரசியல் ரீதியான நடவடிக்கைகள் ஒரு நாட்டின் அதிபர் என்ற கௌரத்தைக் களங்கப்படுத்தும் அதேவேளையில் அவர் ஆற்றும் உரைகளும், அவரின் சில நடவடிக்கைகளும் நாட்டில் இன மோதல்களை ஏற்படுத்தி அமைதியைக் குலைப்பவர்களுக்குக் களமமைத்துக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளன.

கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த ஞானசார தேரரை சிறையிலிருந்து அவர் பொது மன்னிப்பின் மூலம் விடுதலை செய்தமை முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு வழங்கிய ஆசியாகவே பார்க்கப்படுகிறது. மினுவாங்கொடை குளியாப்பிட்டி உட்பட வடமேல் மாகாணங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக வெடித்த வன்முறைகளும் பேரழிவுகளும் கவனத்தில் எடுக்கத்தக்கது. அது மட்டுமன்றி அத்துரலிய ரத்னதேரர் நடத்திய உண்ணாவிரதப் போராட்டமும் அதனால் ஏற்பட்ட குழப்ப நிலைமையும் கண்டி ஞானதேரர் ஊர்வலம் நடத்தப் போவதாகவும் அறிவித்தமையும் மறந்து விட முடியாது. முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் ஒன்றாகத் தமது பதவிகளை ராஜினாமா செய்ததில் ஒரு பெரும் அனர்த்தம் தடுக்கப்பட்டது.


ஆனால், இந்த சம்பவங்கள் இஸ்லாம் நாடுகளின் ஒன்றியமும் முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களும் இலங்கையில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டுமென எச்சரிக்குமளவுக்கு நிலைமை எதிர்வலமாக மாற்றி விட்டன.

இப்படியாக முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளினதும் அநீதிகளினதும் மூல மையங்களாகத் தேரர்கள் செயற்பட்டு வரும் நிலையில் ஜனாதிபதி மகாநாயக்கர்களின் ஆலோசனைகளைக் கேட்டு அனைவரும் செயற்பட்டால் நாட்டில் எவ்வித பிரச்சினையும் இருக்காதெனவும் நாட்டில் அமைதியும் சுபீட்சமும் நிலவுமெனவும் தெரிவித்திருந்தார். தேரர்களின் ஆலோசனைகள் புத்த பெருமானின் அன்பு, கருனை போன்ற கோட்பாடுகளுக்கமைவாக இருக்குமானால் அவற்றைக் கேட்டு நடப்பதில் எவ்வித பிரச்சனையுமில்லை. ஆனால் அவர்களில் செயற்பாடுகள் புத்தபெருமானின் போதனைகளுக்கு விரோதமாகவே அமைந்துள்ளன.

இலங்கையின் முக்கிய நான்கு மதபீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் ஹங்கொட ஞானரத்தின தேரர் மக்கள் முஸ்லிம் வர்த்தக நிலையங்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனவும் முஸ்லிம்களின் உணவகங்களில் சாப்பிடக் கூடாதெனவும். குருநாகல் மகப்பேற்று மருத்துவர் ஷர்பி கர்ப்பத்தடை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட சிங்களக் குழந்தைகள் பிறப்பதைத் தடுத்து விட்டாரெனவும் அவர் தேசத் துரோகியாகக் கருதப்பட்டு கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் எனச் சிலர் கூறுவது சரியானது எனவும் தெரிவித்தார்.

அவரின் கூற்றுக்கு எதிராக எந்தவொரு

(09ஆம் பக்கம் பார்க்க)



# காவிக்குள் திணறும் இலங்கை

## நாட்டுக்கு ஆபத்தாக மாறும் 'அப சரணய்' கோஷம்

- திசரணி குணசேகர

"தவறான விதத்தில் பிடிக்கும் போது ஒரு புல்லின் இதழ் எவ்வாறு ஒருவரின் கையில் வெட்டுக் காயத்தை ஏற்படுத்துகின்றதோ, அதே விதத்தில் துறவிகள் தமது துறவு நிலையை தவறான விதத்தில் முன்னெடுக்கும்போது அது ஒருவரை நரகத்திற்கு இழுத்துச் செல்கின்றது." - தம்மபதம் - நிராய வக்க

2014 அளுத்கம கலவரத்திற்கு சற்று முன்னர் வன்மத்தையும், வன்முறையையும் தூண்டும் புத்த துறவியான கலகொட அத்தே ஞானசார தேரர் 'அப சரணய்' என்ற சொற்பிரயோகத்தைப் புதிதாகப் பயன்படுத்தினார். அது புத்த மதத்தின் போதனைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில், அப்பட்டமான வெறுப்பை தூண்டும் ஒரு போர்க் குரலாக ஒலித்தது.

இப்போது அதி சங்கைக்குரிய அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் 'அப சரணய்' என்ற அந்த எண்ணக்கருவை அதன் தர்க்கரீதியான முடிவுக்கு இட்டுச் செல்லும் விதத்தில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். சமீபத்தில் நிகழ்த்திய பிரசங்கமொன்றின் போது, முஸ்லிம்களுக்குச் சொந்தமான வியாபார நிலையங்களை பகிஷ்கரிக்க வேண்டுமென அவர் மக்களிடம் கேட்டுக் கொண்டதுடன், மாத்தளையில் தொழில் புரியும் வைத்தியர் ஒருவர் ஆயிரக்கணக்கான சிங்கள - பௌத்த குழந்தைகளை நிர்மூலமாக்கி வருகின்றார் என்ற ஒரு போலியான செய்தியையும் பரப்பியிருந்தார். மேலும், நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கும் அவர், தான் தேசத் துரோகிகள் எனக் கருதும் இலங்கை முஸ்லிம்களை கல்லடித்துக் கொல்வதனையும் மறைமுகமாக ஆதரித்துப் பேசியுள்ளார்.

அத்தகைய விதத்தில் கடும் வன்மத்தைத் தூண்டும் ஒரு உரையை நிகழ்த்தி விட்டு, மதத் தலைவர் ஒருவர் தப்பித்துக் கொள்ளக்கூடிய வேறு இடங்கள் உலகில் இருக்குமாயின், அவை சமயத் தலைவர்களின் ஆட்சி இடம்பெற்று வரும் சவூதி அரேபியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளாக மட்டுமே இருந்து வருகின்றன. நாகரீகமடைந்த எந்தவொரு நாட்டிலும் இந்த வகையான கூற்றுக்கள் நாலாபக்கங்களிருந்தும் மிகக் கடுமையான கண்டனங்களை எதிர்கொண்டிருக்க முடியும். அத்தகைய கருத்துக்களை முன்வைத்திருக்கும் நபர் ஆகக் குறைந்தது பொது மக்களின் கடும் நிந்தனையை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும்.

இலங்கையில் மங்கள சமரவீரவை தவிர, எந்தவொரு அரசியல்வாதியும் இந்த உரையைக் கண்டிக்கும் விதத்தில் வாயைக் கூட திறந்திருக்க வில்லை. இந்த மௌனம், பல இலட்சக்கணக்கான சொற்களிலும் பார்க்க வலிமையானதாக இருந்து வருவதுடன், அது வன்முறை மற்றும் சகிப்புத் தன்மையற்ற தீவிரவாதம் என்பவற்றின் அனைத்து வடிவங்களுக்குமான எண்ணற்ற கதவுகளை திறந்து விடுகின்றது.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இதே மகாநாயக்க தேரரின் இரண்டாம் நிலை தேரர் ஒருவர், ஒரு ஹிட்லரைப் போலவாவது செயற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டுமென கோட்டாபய ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.


இந்தக் கருத்துக்களை ஒன்றாக எடுத்து நோக்கும் பொழுது, இலங்கையில் புத்த மதத்தைப் பீடித்திருக்கும் ஓர் இனம் புரியாத வியாதியை அது பிரதிபலித்துக் காட்டுவதனை அவதானிக்க முடிகிறது. இலங்கையின் சமூக வாழ்க்கையில் புத்த பிக்குகள் வகித்து வரும் முதன்மையான வகிபங்கின் பின்புலத்தில், இந்த வியாதி நாட்டின் அரசியலிலும், பரந்த சமூகத்திலும் மிகப் பாரதூரமான பின்விளைவுகளை எடுத்து வர முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

புத்த பெருமானின் போதனைகள், மத குருமார் மற்றும் சாதாரண பிரஜைகள் ஆகியோரைக் கொண்ட தீவிரவாதிகளின் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு, உருக்குலைக்கப் பட்டிருப்பது டன், அந்தக் குழுவினர் சகிப்புத்தன்மையற்ற நிலை மற்றும் வன்முறை என்பவற்றை ஒரு புண்ணிய காரியமாக நியாயப்படுத்தி வருகின்றனர். இவ்விதம் அவர்கள் இலங்கையில் தன்னிச்சையான விதத்தில் தமது கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டால், எமது நாடு வெகு விரைவில் காவி - ஸலாபிசவாதத்தின் கடும் பிடிக்குள் சிக்குண்டு, மூச்சுத் திணற முடியும். இதோ, இப்பொழுது அதற்கு எதிராக நாங்கள் எல்லோரும் குரல் எழுப்ப வேண்டிய தருணம் வந்துள்ளது.


# தேடும் கண்கள்



**பூநாரை**
வைல்ட் ஸ்ரீலங்கா
படம் : ஹரி சுதர்சன்




**சிறுத்தை**
வைல்ட் ஸ்ரீலங்கா
படம் : ரிஷ்நாத் ஹுசைன்



## மரங்கொத்தி

உலகின் பெரும்பாலான நாடுகளில் வசிக்கும் பறவைகளுள் மரங்கொத்தியும் ஒன்று. அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, மடகாஸ்கர், தென், வட முனைகளிலுமே இப்பறவைகள் இல்லை.


மரங்கொத்திகளில் 200 சிற்றினங்கள் உள்ளன. இவற்றுள் 95 வீதமானவை மர வாழ் பறவைகளாகவே உள்ளன. இவற்றில் 8 வகைப் பறவைகள் இலங்கையில் உள்ளன.

கூர்மையான, வலுவான அலகுகளைக் கொண்ட இந்தப் பறவைகள் மரங்களில் வாழும் பூச்சி, புழுக்களை உணவாகக் கொள்கின்றன. இதன் அலகு செல்ல முடியாத பொந்துகளுக்குள் இதன் நீளமான பசைத் தன்மையான நாக்கை நுழைத்து இரையை வேட்டையாடுகின்றன.

பூச்சி, புழுக்கள் தவிர பழங்கள், பருப்புகள், பூவின் தேன் ஆகியவற்றையும் இவை உணவாகக் கொள்கின்றன. மரங்களில் பொந்துகளில் குஞ்சுகளை வளர்க்கின்றன. இவை மரத்தில் தட்டி ஒலி எழுப்புவதன் மூலம் தனது இணையை ஈர்க்கின்றன. நாள் ஒன்றில் எட்டாயிரம் தொடக்கம் பன்னிரண்டாயிலம் முறை மரத்தை அலகால் கொத்தி ஒலி எழுப்புகின்றன.



**அரசவால் ஈபிடிப்பான்**
நல்லூர் வடக்கு படம் : செ.ராஜேந்திரா



**பனங்காகம்**
வைல்ட் ஸ்ரீலங்கா
படம் : அன்ரன்



**செண்பகம்**
வைல்ட் ஸ்ரீலங்கா
படம் : உதயசானக




**பச்சோந்தி**
வைல்ட் ஸ்ரீலங்கா
படம் : குமார சேனநாயக்க

# தன்னைத்தானே...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதபீடமோ, அரசியல்வாதியோ எதிர்த்துக் குரல் எழுப்பவில்லை. புத்த பெருமானின் அன்பு, கருணை கோட்பாட்டுக்குள் கல்லெறிந்து கொல்லுதலும் அடங்குமென அவர்கள் கருதுகிறார்கள் போலிருக்கிறது. ஆனால், மாற்றுக் கொள்கைக்கான நிலையத் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து, தேரரின் அவருக்கு எதிராகப் பதில் பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டுள்ளார். ஜனாதிபதியின் விசுவாசியான முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க பாக்கியசோதி சரவணமுத்துவை வன்மையாகக் கண்டனம் செய்தததுடன் முறைப்பாட்டை வாபஸ் பெறும்படி மிரட்டியுமுள்ளார். என்றாலும்கூட மகாநாயக்கர்களின் ஆலோசனையை எல்லோரும் கேட்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் கூற்றுக்கமைய வென்னப்புவ பிரதேச சபையின் தலைவர் சுகந்த பெரேரா தங்கொட்டுவ சந்தையில் வர்த்தகம் செய்ய முடியாதெனத் தடை விதித்து விட்டார். ஆனால் நீதிமன்றம் அப்படித் தடைபோடுவது சட்டவிரோதம் எனக்கூறி அங்கு அனைவரும் வியாபாரத்தில் ஈடுபட முடியுமெனத் தீர்ப்பு வழங்கி விட்டது.

குருநாகல் வைத்தியரை தொடர்ந்து கடந்த இரண்டு மாதங்களாகத் தடுத்து வைத்து விசாரணை நடத்திய பொலிஸார் அவர் கருத்தடை சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டார் என்பதற்கு சாட்சியங்கள் இல்லையெனவும் சட்டத்துக்கு அப்பாற்பட்ட முறையில் சொத்து சேர்த்தார் என்பதற்கும் ஆதாரங்கள் இல்லை எனவும் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

தேரரின் ஆலோசனைப்படி மருத்துவர் சாபியைக் கல்லெறிந்து கொன்றிருந்தால் என்ன நிலைமை?

அதேவேளையில் விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத அத்துரலிய ரத்ன தேரர் சாபி தொடர்பாக முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மீண்டும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பதில் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஏற்கனவே அத்துரலிய ரத்ன தேரர் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் பயங்கரவாதிகளுக்குத் துணை போனார் என்றும் அவர் பதவி விலக்கப்பட வேண்டும் எனவும் கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். இதனால் நாட்டில் பெரும் குழப்ப நிலை தோன்றியதை நாமறிவோம். தற்சமயம் பதில் பொலிஸ் மா அதிபர் ரிஷாட் பதியுதீனுக்கும் குண்டுத் தாக்குதல்களுக்கும் எவ்வித தொடர்பில்லை என நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

ஒரு பொய்யான குற்றச்சாட்டை வைத்து நாட்டில் இரத்தாறு ஓட வைக்க முயன்ற தேரர்களின் ஆலோசனைகளை எல்லோரும் கேட்டு நடத்த வேண்டும் என ஜனாதிபதி அறிவுறுத்துவது எவ்வளவு வேடிக்கையானதும் வேதனையானதுமாகும்.

எப்படியிருப்பினும் நாடாளுமன்றத்தைக் கலைத்தது முதல் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளை நாடு கேட்க வேண்டுமெனக் கூறியது வரை தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள் மூலம் தன்னைத்தானே தரமிறக்குவதுடன் ஜனாதிபதி பதவியின் கௌரவத்தையும் கீழ்மைப்படுத்துகிறார் என்பதே உண்மையாகும்.



கடந்த 29.06.2019 அன்று சாவகச்சேரி சின்ன இல்வாரைக்குளத்தில் பசுமைச் சுவடுகள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகையும், கலந்துரையாடலும் செயற்பாடு ஆரம்பமானது. 35 மருதமரக்கன்றுகள் குளத்தைச் சுற்றி நாட்டப்பட்டன.



இயற்கை வழி இயக்கத்தின் ஆதரவில் கல்வியங்காட்டில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான பால் பண்ணை ஒன்றில் ஒழுங்குபடுத்தப்பட்ட கலந்துரையாடலின்போது

# வாரபலன்

### மேடம்
சிலருக்கு வெளியூர் வெளிநாடு செல்லும் பாக்கியம் கிட்டும். பொருளாதாரத்தில் சிறப்பான மேம்பாடு அடைவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தைப் பெருக்குவீர்கள்.

### ரிஷபம்
திட்டமிட்ட வேலைகளில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டு வெற்றிபெறுவீர்கள். சிலருக்கு வெளியூர் பயணம் செய்ய வேண்டி வரலாம். பொருளாதாரத்தில் மேம்பாடு உண்டாகும். வியாபாரிகள் வியாபாரத்தைப் பெருக்கலாம்.

### மிதுனம்
சில தெய்வ காரியங்களுக்குச் செலவு செய்து பெருமையடைவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் பிரச்சினைகள் குறையும். வியாபாரிகள் பெரிய சந்தைகளை நாடிச் செல்ல வேண்டிய பலன் உண்டு.

### கடகம்
செலவுகள் அதிகமாகும். வரவுகள் குறையும்.மனக் கவலைகளால் வேலைகளில் தாமதம் ஏற்படும். பொருளாதாரம் சீராக இருந்தாலும் சிறிய கடன்பட வேண்டிய தருணம் இது. உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளுஅதிகரிக்கும்.

### சிம்மம்
தற்போது நிலவும் சூழல்களால் மனதில் புதிய நம்பிக்கைகள் பளிச்சிடும். உத்தியோகஸ்தர்கள் புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்கள் லாபமாக இருக்கும். விவசாயிகளுக்கு வரவு குறையும்.

### கன்னி
திட்டமிட்டுச் செயல்படுவீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும். அனுபவஸ்தர்களைக் கலந்தாலோசித்த பிறகே முக்கிய முடிவுகளை எடுக்கவும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பேச்சைக் கேட்டு நடக்கவும்.

### துலாம்
குடும்பத்தில்,அமைதி நிலவும். சேமிப்பில் கவனம் செலுத்துவீர்கள். செய்தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றத்தைக் காண்பீர்கள் உத்தியோகஸ்தர்கள் நிதானமாகச் செயற்படவும். விவசாயிகளுக்கு விளைச்சல் நன்றாக இருக்கும்.

### விருச்சிகம்
பொருளாதார நிலை ஏற்ற இறக்கமாக இருக்கும். தடை கற்கள் படிக்கற்களாக மாறும். உடன்பிறந்தோர் வகையில் மனக்கசப்புகள் உண்டாகலாம். உத்தியோகஸ்தர்களுக்கு மறைமுக எதிர்ப்பு இருக்கும்.

### தனுசு
உழைப்புக்கேற்ற பலன் கிட்டும். பணவரவில் குறைவு இராது. குடும்பத்தில் அமைதி நிலவும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைச்சுமை அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு மறைமுக எதிர்ப்புகள் குறையும்.

### மகரம்
பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். வியாபாரிகள் நண்பர்களை நம்பி எதையும் செய்யவேண்டாம்.

### கும்பம்
வேலைத் தொந்தரவுகள் அதிகரிக்கும். வீண் அலைச்சல்களும் உடல் சோர்வும் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

### மீனம்
செல்வாக்கு உயரும். வருவாய் பெருகும். குடும்பத்தினரிடம் விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளவும். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்களில் சுமுகமான சூழல் தென்படும். விவசாயிகளுக்கு விளைச்சல் நன்றாக இருக்கும்.

# புலியை நம்பிய பிராமணன்



பஞ்சதந்திர கதைகள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

"எல்லாம் சரிதான் புலி மனிதரை அடித்துத் தின்னும் என்கிறார்களே ஜனங்கள்" என்றான் பிராமணன்..

"எனக்குத் தர்ம சாஸ்திரம் தெரியும் தன் பிராணன் தனக்கு எப்படித் தித்திப்போ அப்படியே எல்லார்க்கும் என்பது எனக்குத் தெரியும் எத்தனையோ பேர் சென்றார்கள் அவர்களுக்கெல்லாம் கொடுக்க எனக்குத் தோன்றவில்லை உன்னைப் பார்த்தால் மிகவும் தரித்திரனாகத் தெரிகிறது அதனால் உனக்குக் கொடுக்க என் மனம் ஆசைப்படுகிறது ஏழைக்கே கொடுக்க வேண்டுமென்று சாஸ்திரங்களும் சொல்கின்றன. மருந்தை நோயாளிக்குத்தான் தரவேண்டுமே தவிர ஆரோக்கியமானவனுக்கல்ல. ஏழைதான் நோயாளி பணக்காரர்தான் ஆரோக்கியமானவன். இந்தப் பொன் காப்பை உனக்குக் கொடுப்பதே தகும். அதனால் தான் மற்றவர்களை விட்டுக் காத்திருந்து உன்னைப் பார்த்ததும் அழைக்கிறேன் வா... வந்து இந்தப் பொன் காப்பை வாங்கிச் செல்." என்று சொல்லி புலி பிராமணனை வற்புறுத்தியது. பிராமணன் புலியின் வார்த்தையால் ஈர்ப்புண்டவனாய் ஓரடி எடுத்து வைத்தான்.

"ஏரியில் மூழ்கிவந்து பரிசுத்தமாகப் பெற்றுக்கொள் "என்றது புலி,

பிராமணன் ஏரியில் இறங்கினான். நீருக்கடியில் சேறும் சகதியுமாக இருந்ததால் அவன் கால்கள் சிக்கிக் கொண்டன. நகர முடியவில்லை.

"பிராமணா! பயப்படாதே நான் உன்னைச் சேற்றிலிருந்து விடுவிக்கிறேன்." என்று தைரியம் அளித்த புலி மெதுவாக அவனை நெருங்கியது. சட்டென்று பிடித்துக் கொண்டது.திக்கென்றது பிராமணனுக்கு.

துஷ்டர்கள் வேததியானம் பண்ணியிருந்தாலும் தரும் சாஸ்திரம் அறிந்திருந்தாலும் அவர்களது வார்த்தையில் நம்பிக்கை வைக்கக்கூடாது. எவனெவன் எப்படியோ அவனவன் அப்படித்தான். அந்த இயல்பு போகாது. யாசகம் பண்ணியே பழகிவிட்ட சுபாவத்தால் இந்த துஷ்டப் புலியின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து... என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கும் போதே புலி அவனைக் கொன்றது. தின்றது

பாவம் பிராமணன் பரலோகம் சேர்ந்தான்.

(முற்றும்)

# அட அப்படியா?



1. 507 கரட் எடையுள்ள உலகிலேயே பெரிய வைரம் , தென்னாப்பிரிக்க வைரச் சுரங்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது .


2. எந்த விளையாட்டுக்கும் இல்லாத தனிச் சிறப்பு படகுப் போட்டிக்கு உண்டு . பின்பக்கமாகத் திரும்பி வெற்றிக்கோட்டைத் தொடும் ஒரே விளையாட்டு இது மட்டும்தான் .

3. எல்லா வகை ரத்தத்துடனும் சேரும் ரத்த வகை ' ஓ' பொஸிட்டிவ்.

4. நமது உள்ளங்கையில் ஒரு சதுர அங்குலத்திற்கு 3000 வியர்வைச் சுரப்பிகள் உள்ளனவாம் .

5. பொதுவாகவே நல்ல பெற்றோலானது எங்கு சிந்தினாலும் சிறிது நேரத்தில் சிந்திய சுவடு தெரியாமல் மாயமாகி விடும் . கலப்பட பெட்ரோல் மட்டுமே சிந்திய இடத்தில் சிறிய வரைபடம் போன்று அதன் எல்லைக் கோட்டை விட்டுச் செல்லும் .

# ஆச்சரியமான உண்மை



இரண்டு கைகளினாலும் எழுதுவது என்பது எளிதில் இயலாத ஒன்று. இந்த இயலாத ஒன்றை மிகவும் சிறப்பாக செய்து அனைவரையும் ஒரு காலத்தில் வியக்க செய்த நாம் அனைவரும் அறிந்த ஒருவர் இருந்திருக்கிறார்.அவர்தான் மகாத்மா காந்தி .இவர் இரண்டு கைகளால் எழுதும் திறமை உள்ளவராம் . இதில் என்ன வியப்பு என்றால் நம்மில் பலரும் இரண்டு கைகளால் எழுதுவது உண்டு ஆனால் அதிகமாக போனால் நமது பெயர் அல்லது சில வரிகள்தான் எழுதுவோம் ஆனால் இவர் ஒரே நேரத்தில் தொடங்கி அறுபது பக்கம் கொண்ட ஒரு மிகப்பெரியக் கட்டுரையை ஒரே நேரத்தில் இரண்டு கைகளாலும் எழுதும் அளவிற்கு திறமை கொண்டிருந்தாராம் . அவர் எழுதியக் கட்டுரையை சரி பார்த்த பலர் எந்த மாற்றமும் இன்றி ஒரே கை கொண்டு எழுதிய கட்டுரைபோல் இரண்டும் இருப்பதுக் கண்டு வியந்து போனார்களாம் .

# ஆங்கிலம் கற்போம்




கேள்விகள் கேட்கப்படும்போது, வாக்கியங்கள் எப்படி அமைகின்றன?

Question (Interrogative)

Auxiliary verb + Subject + Main verb

Will + I /you /he /she /it /you /we /they + do a job?

இவற்றில் "Subject" அதாவது விடயம் பின்னாலும் "Auxiliary verb" துணை வினை வாக்கியத்தின் ஆரம்பித்திலுமாக மாறி வந்துள்ளதை அவதானியுங்கள்.இவ்வற்றை சரியாக விளங்கிக் கொண்டோமானால் நாமாகவே மிக எளிதாக கேள்வி பதில்களை மாற்றி அமைப்பது என்பதை அறிந்துக்கொள்ளலாம்.

Will you do a job?
நீ ஒரு வேலை செய்வாயா?
Yes, I will do a job
ஆம், நான் ஒரு வேலை.செய்வேன் .
No, I won't do a job. (will + not)
இல்லை, ஒரு வேலை.நான் செய்யமாட்டேன் .
Will you speak in English?
நீ ஆங்கிலத்தில்பேசுவாயா ?
Yes, I will speak in English.
ஆம், நான் ஆங்கிலத்தில் பேசுவேன்.
No, I won't speak in English. (will + not)
இல்லை, நான் ஆங்கிலத்தில் பேசமாட்டேன் .
Will you go to school?
நீ பாடசாலைக்கு போவாயா?
Yes, I will go to school.
ஆம், நான் பாடசாலைக்கு போவேன் .
No, I won't go to school. (will + not)
இல்லை, நான் பாடசாலைக்கு போகமாட்டேன்.

(மீதி அடுத்த வாரம்)

# தமிழே தமிழே

**பத்துக்கு ஒரு பூஜ்யம் . மகாயுகத்திற்கு எத்தனை பூஜ்யம் ?**




*100000000* = அற்புதம் - hundred million
*1000000000* = நிகற்புதம் - one billion
*10000000000* = கும்பம் - ten billion
*100000000000* = கணம் - hundred billion
*1000000000000* = கற்பம் -one trillion
*10000000000000* = நிகற்பம் - ten trillion
*100000000000000* = பதுமம் - hundred trillion
*1000000000000000* = சங்கம் - one zillion
*10000000000000000* = வெள்ளம் - ten zillion
*100000000000000000* = அந்நியம் - hundred zillion
*1000000000000000000* = ARTTAM - வேறு மொழியில்?
*10000000000000000000* = PARARTTAM - வேறு மொழியில்?
*100000000000000000000* = பூரியம் POORIYAM - வேறு மொழியில்?
*1000000000000000000000* = முக்கோடி MUKKODI - வேறு மொழியில்?
*10000000000000000000000* = மகாயுகம் MAHAYUGAM - வேறு மொழியில்?

நலம் - 01

# இன்னா நாற்பது இனியவை நாற்பது

**40 வயதுகளில் இருப்பவர்களுக்கான மருத்துவத் தொடர் இது.**
நன்றி – ஆனந்தவிகடன்

**மருத்துவர் கு. சிவராமன்**

குறைந்தபட்சம், மூன்று ஆண்டு களாவது, நான் 39 வயதிலேயே 'தங்கி' இருந்திருப்பேன். '40 ஆகீட்டுது' என்று சொல்வதில் எனக்கும் பெரும் தயக்கம் இருந்த துண்டு. 40 வயதைத் தொட்ட பலருக்கும் இந்த அனுபவம் இருக்கலாம். வயதைக் கேட்டால், "லேட் 40ங்க" என்று நாகரிகமாகச் சொல்லும் அழகுப் பாட்டிகள் சிலரை நான் பார்த்திருக்கிறேன்.

"அங்கிள், பஸ் போயிட்டா?" என்று எங்கேனும் ஓர் இளைஞி கேட்டுவிட்டால் பதற்றம் சூழ்ந்துகொள்கிறது. வீட்டுக்கு ஓடிவந்து வழக்கமாக உள்ளாடைகளை தொங்கப்போடப் பயன்படுத்தும் ட்ரெட் மில்லில் ஓடி, 5 கிலோ தம்புல்ஸை மூச்சிரைக்க நகர்த்தி, கை வீங்கி பனியனைக் கழற்றவும் போடவும் ஆள்தேடிய வரலாறு பலருக்கும் இருக்கலாம். "அங்கிள்... என் அகராதியிலேயே இல்லாத, எனக்குப் பிடிக்காத அசிங்கமான வார்த்தை" எனக் கொக்கரிக்கும் புதுச் சித்தப்பன்கள் நகர்ப்புறத்தில் அதிகம். ஆம்! நாற்பது, அநேகமாய் நம்மில் பலருக்கும் பிடிக்காத வயதுதான். இருபதைக் கொண்டாடிய மாதிரி நாற்பதைக் கொண்டாடுவதில்லை யாரும்.


'நாற்பது பிறந்தாலே நாயின் குணம்' என்பார்கள். அதோடு, உடல் பற்றிய கவலை வேறு... இந்த வயதை அழகாக, ஆரோக்கியமாக, ஆனந்தமாக நகர்த்துவது எப்படி..? இது ஒட்டுமொத்த உலகமும் யோசிக்கும் முக்கிய கேள்வி. கடந்த ஆண்டு இறுதியில்கூட உலக சுகாதார நிறுவனம் Global Health Challenges -2018 அறிக்கையில் "நாற்பதை ஒட்டியவர்களே நாள்பட்ட நோய்களில் அதிகம் சிக்குகிறார்கள்" என்று கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்திருக்கிறது.

வயோதிக வியாதிகள் எல்லாம் வாலிப வியாதியாக மாற்றம் கொள்ள, வாலிபர்கள் உற்சாகம் தேடிய காலம்போய், சிக்ஸ் பேக்குக்காக ஜிம்மைத் தேட ஆரம்பித்துவிட்டார்கள்.

'நாற்பதில் மாஸ்ரர் செக்கப் செய்யணும் - செஞ்சே ஆகணும். இல்லைன்னா..." என அலுவலகத்தில் பக்கத்தில் இருக்கும் பெண் எதேச்சையாகச் சொல்லித் தொலைக்க, "நீங்க இதை ட்ரை பண்ணிப் பார்க்கலாமே...?" என்று வளைக்கும் இரத்த சோதனை நிறுவனங்களின் மாஸ்டர் பிளானில் சிக்கி, ரிசல்ட்டைப் படிக்கும் மருத்துவர், 'சிக்கிட்டாண்டா' எனச் சிரிப்பது நாற்பதுகள் பார்க்கும் மருத்துவர் இலக்கணம்.

'பெருசா ஒன்றுமில்லை... சுகர் லைற்றா போர்டர் தாண்டுது, இனி சீனி வேணாம்", என்று சொன்ன மாத்திரத்தில், டொக்டர் நம் நாட்டு இராணுவம் போலாவதும், நாம் அரசியல்கைதிகள் போலாவதும் இயல்புதான். அதோடு, "சிறுநீரில் லேசா புரதம் காட்டுது... பி.பி இருக்கா என்ன?" எனக் கேட்கையில் இதயம் எக்குத்தப்பாக எகிறிக்குதிக்கும்.

"இனி உப்பு வேண்டாம்... கொழுப்பைக் குறைக்க வேணும்.



அடுத்த தடவை நீங்க வரும்போது ஆஞ்சியோ பண்ணலாம். அப்புறம், இந்த ஈரல் கொழுப்பு துளி கூடுதே, மது பாவனை இருக்கா...?", என அடுக்கடுக்காக அடுக்க... மொத்த சீனும் மாறிப்போயிருக்கும். ஜீன்ஸ், ஷேர்டைக் கழற்றிவிட்டு, டோஹாவின் அரபு வணிகர் மாதிரி ஆஸ்பத்திரி கவுன் மாட்டி, வாயில் 15-16 தெர்மாமீற்றரைச் செருகி வைத்திருப்பதுபோல பீலிங் வரும். நேர்ஸ் உடையில் மனைவி தெரிவாள். கூடவே பிள்ளைகளும் ஆஸ்பத்திரி ஊழியர்களாகத் தோன்றுவர். ஆமாம். நாற்பது, கண்ணசந்தால் நோயாளியாக்கும் வயது.

நம் அப்பாவின் நாற்பதுகளில் இவ்வளவு நோய் பிரச்சினை இருக்கவில்லை. சுகரெல்லாம் பணக்காரருக்கு வருகிற வியாதி. பசிக்கும்போது, முந்திரிப்பருப்பை வறுத்துத் தின்பவருக்கு வருவது. அவர்கள் பார்த்த, புற்றுநோய் வந்த இரண்டே இளைஞர்கள், 'வாழ்வே மாயம்' கமல்ஹாசனும், 'பயணங்கள் முடிவதில்லை' மோகனும் மட்டும்தான். இன்று, புதிய நோயாளி அட்டைபெறும் அத்தனை பேரும் அநேகமாய் நாற்பதுகள்தாம்.

**ஏன்? என்ன நடக்கிறது இங்கே?**

நம் முந்தைய தலைமுறையின் நாற்பதுக்கும், நம் நாற்பதுக்கும் வாழ்வியலின் ஒவ்வொரு கூற்றிலும் ஏகப்பட்ட வித்தியாசங்கள். இலையில் போடும் இட்டலியிலிருந்து, காற்றில் இருக்கும் suspended particles அளவு வரை எல்லாவற்றிலும் வேறுபாடு. நம் அப்பாவின் நாற்பதில், ஏழாம் முறையாக ஷேவிங் செய்த ஒரு ரூபாய் பிளேற்றை எட்டாவது முறைக்காகப் பாதுகாப்பாக பட்டர் பேப்பரில் சுற்றி வைப்பார்.

அதன் கடமை முடிந்ததும், நாம் பென்சில் சீவ, பத்திரமாய் ஒரு வருடம் வீட்டிலிருக்கும். நாம், நம் நாற்பதில் நான்கு பிளேற்றை ஒரே பிடியில் நிறுத்திச் சவரம் செய்யும் உலகத்தரமான மொடர்ன் பிளேற்றை 450 ரூபாய்க்கு வாங்கி பயன்படுத்திய இரண்டாவது தடவையிலேயே தூக்கி எறிகின்றோம். தூர எறிந்த அந்த நெகிழிக் குப்பையின் ஏதோ ஒரு 'பொலிவினைல்" கூறு, எங்கோ ஒருவனுக்கு 'லிம்போமா' வைத் தருகிறது. ஒரு பெரும் கும்பலுக்கு ஏராளமாகக் காசை உருவாக்கித் தருகின்றது. அப்பா சவரம் செய்த முதல், பயணித்த லுமாலா சைக்கிள் வரை அத்தனையும் அந்தக்கால நாற்பதுக்கு நலம் தந்தது.

'தசரதனுக்கும் மயிர்தான் நரைச்சுதாக்கும்" எனத் தன் வெள்ளிப்பனி படர்ந்த காதோர நரையைப் பெருமையாகக் காட்டியவர்கள் நம் அப்பாக்கள். 'ஷேவ் பண்ணும்போது மீசையைக் கவனிக்க மாட்டீங்களா? இடப் பக்கமா 3-4 முடி நரைச்சு என்னைக் கேவலப்படுத்துது" என்கிற ராஜமாதாவின் வசனத்தை உள்வாங்கி, "இந்த அமோனியா, பெட்ரோல் பென்சீன் எல்லாம் இல்லாத தலைமுடி டை இருக்கா?" என நமது நாற்பது வயது கேட்டு அலைகின்றது. அநேகமாகப் பாதி வாழ்வைக் கடந்திருக்கின்றோம் என்ற உடலின் எந்த அடையாளத்தையும் நாம் பெற விரும்பவில்லை. அன்றைய நாற்பதில் பூப்போட்ட சட்டைகூட ஆண்களுக்கு அசிங்கம். அதெல்லாம், நம்பியாருடன் கபாலியும் மொட்டையும் மட்டுமே போடுவார்கள் அல்லது திருந்துவதற்கு முன் வில்லன் போடும் ஷேர்ட் அது.

இன்று முழங்கால் கிழித்த ஜீன்ஸையும், சிறுவன் அலுமாரியிலிருந்து எடுத்த ஷேர்ட்டையும் நம்மால் போடமுடிகிறது. என் அம்மா ஒரே ஒருமுறை நைற்றி போட்டு (அப்போது அதற்குப் பெயர், மக்ஸீ) கடைக்குப் போனபோது ஒட்டு மொத்தத் தெருவும் பதறிப்போய் புறணி பேசியதை மறக்கமுடியாது. அந்த ஒருநாளின் பின் அவர் தன் 65 வயதில் ஆஸ்பத்திரியில் இருந்தபோது ஒருமுறை நைற்றி போட்டிருந்தார் என ஞாபகம்.

அன்றைய நாற்பது, அலுவலகம் விட்டுவந்த கையோடு, சாரமோ, வேட்டியோ கட்டி ஈஸிசெயாரில் உட்கார்ந்து, காலையில் வந்த பேப்பரில் என்ன இருக்கிறது என்று படித்துக்கொண்டே, சுவரில் சாய்ந்து வீட்டுப்பாடம் எழுதிக்கொண்டிருந்த பிள்ளைகளைக் கண்கள் கண்காணிக்கும். இன்றைய காட்சி வேறு. பதினேழு பொக்கெற் உள்ள, சிறுவனின் ரவுசரை எடுத்துப் போட்டுக்கொண்டு, சோபா ஷெட்டியில் கோணலாகப் படுத்துக்கொண்டு, 'வட்ஸ் அப்பில் ப்ளூ டிக் வந்துவிட்டதா?' என மூன்று நிமிடத்துக்கு ஒருமுறை பார்த்துக்கொண்டு, 'தொலைக்காட்சியில் முதலிட்ட நிறுவனத்தின் பங்கு ஏறுகிறதா?' என்பதை என் நாற்பது கண்காணிக்கிறது.

நம் அம்மாக்களின் நாற்பதுகளைவிட இன்றைய பெண்ணின் நாற்பது இன்னும் வலி நிறைந்தது. யன்னலுக்கு வெளியே உள்ள உலகத்தை அன்று அவள், பாரதிராஜாக்களிடமும், பாலகுமாரன்களிடமும் மட்டுமே கேட்டறிந்திருந்தாள். சீறிவந்த கோபமும் அழுகையும் பதற்றமும் கடந்து போகும்வரை,தனக்கான பிரச்சினைக்கும், நிற்கப்போகும் மாத விடாய்க்கும் உள்ள தொடர்பு அவளுக்குத் தெரியாது. சாமான்கள் போடும் றூமின் இருட்டில், எப்போதோ கிடைத்த அவசர முத்தத்தை அழித்துவிட்டு, 'வீட்டில் வயதுவந்த பிள்ளை இருக்கா என்று தெரியாதா?" எனப் போலியாகவோ, போதாமையாகவோ விலகிநின்று வெட்கி ஓடியதில் அவள் நலம் சற்று சரியாகவே இருந்தது. அல்லது சரியாக இருந்ததுபோல அவள் இருந்தாள்.

(இனியவை தொடரும்)

# சாதித் திமிர் பிடித்த சிங்க
# ஏற்றுக்கொள்ளுமா சஜித்

தயாளன்

இந்தியாவின் ஆட்சி அதிகாரம் வட மாநிலத்தினருக்கே என்ற நிலையை உடைத்தவர் பி.வி. நரசிம்மராவ். அறுதிப் பெரும் பான்மை இல்லாதபோதும் தனது இராஜதந்திரத்தால் ஆட்சிக காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்தவர் அவர். அதுபோலவே இலங்கையில் உயர்சாதி பௌத்தருக்கே ஆட்சி உரிமை என்ற நிலையை தகர்த்தெறிந்தவர் ரணசிங்க பிரேமதாஸ. சாம, தான, பேத, தண்டம் என சகலவற்றையும் பயன்படுத்தியே தனது இலக்கை அவரால் அடைய முடிந்தது. அப்படியிருந்தும் சொந்தக் கட்சியினராலேயே குறிப்பாக யாழ். நூலக எரிப்பு புகழ் காமினி திஸநாயக்க மற்றும் லலித் போன்றோரால் அவரது தலைமையைக் கவிழ்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் தான் யார் என்பதை மீண்டும் சில சிக்னல் மூலமாக பிரேமாஸ உணர்த்தியதை அடுத்து அவர்கள் அடங்கிப்போயினர். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்பன கூட்டாக இணைந்தே தமது சாதித் திமிரை நிலைநாட்ட முனைந்தனர். அந்த முயற்சியை மேற்கொண்ட குழுவினரின் எச்சசொச்சமாக ரவி கருணாநாயக்க விளங்குகிறார்.



தற்போது ஐ.தே.கவினரைப் பொறுத்தவரை அடுத்த ஜனாதி பதி வேட்பாளர் தான்தான் என நிலைநாட்ட மூவர் முயற்சிக் கின்றனர். கருஜெயசூரிய தனது சம்பந்தி காமினி திஸநாயக்கவைப் போலவே தானும் தமிழின எதிர்ப்பில் சளைத்தவரல்ல என்பதை எதிர்க்கட்சித் தலை மையை சம்பந்தனிடம் இருந்து பறித்து மஹிந்தவிடம் வழங்கியதன் மூலம் பௌத்த பீடங்களுக்கு உணர்த்தினார். இந்தப் பீடங்களும் ஏதோவொரு வகையில் பௌத்தத்துக்கு தொண்டாற்றியவர் என இவருக்கு ஆசியும் வாழ்த்தும் வழங்கியுள்ளனர். தனக்குப் பெண் கொடுத்த மாமானரான கருஜெயசூரியவை பொது வைபவம் ஒன்றில், 'எதிர்கால ஜனாதிபதி வேட்பாளர் அவர்களே...", என விளித்துப் பேசினார் நவீன் திஸநாயக்க. நாகத்தின் குட்டிக்கு விஷ மில்லாமல் போகுமா? அப்பன் நூலக எரிப்பை வழிநடத்தினார். இவரோ 2005 நவம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரித்துப் பேசும்போது, 'புலிகளை



உடைத்து கருணாவை வெளியில் கொண்டுவந்தவர்", எனப் புகழாரம் சூட்டினார். அதனை மௌனமாகப் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டார் ரணில். புலிகள் ரணிலுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க முடியாமல் போனதற்கான காரணங்களில் இதுவும் முக்கியமானது.

முதன்முதலாக இலங்கையில் எதிர்க்கட்சித் தலைவராக ஒரு தமிழரான அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் தெரிவானதால் பௌத்தபீடங்கள் கடும்சினமுற்றன. அக்காலத்தில் நிறைவேற்றதிகாரமுள்ள ஜனாதிபதியாகத் தன்னை உயர்த்திக் கொண்ட ஜே.ஆரைச் சந்தித்து, 'எதிர்காலத்தில் பௌத்த சிங்களவரே ஜனாதிபதி,

# களம்

# த்தை?



பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் போன்ற உயர் பதவிகளை வகிக்க வேண்டும். இதற்கேற்ற.வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்", என அறிவுறுத்தின. அதனைக் கருத்தில் கொண்டே விகிதாசாரத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தினார் ஜே.ஆர். (பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக மாறிய கதையாக நுவரெலியாவில் ஒரு தமிழர் தெரிவானதற்குப் பதிலாக 3 இற்கும் மேற்பட்டோர் மற்றும் கண்டி, கொழும்பு முதலான இடங்களில் தமிழர் பிரதிநிதியாகத் தெரிவாக இம்முறை வழிவகுத்தது.) ஆனாலும் தமிழரான சம்பந்தர் ஏதோ ஒரு வழியில் எதிர்க்கட்சித் தலைவரானதால் பௌத்த பீடங்கள் கடுப்பாகின. அவற்றைச் சாந்தப்படுத்தவும், எதிர்கால ஜனாதிபதித் தேர்தலில் தான் வேட்பாளராகப் பௌத்த பீடங்கள் ஆதரவளிக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும் எதிர்க்கட்சித் தலைமையை சம்பந்தனிடம் இருந்து பறித்து மஹிந்தவுக்கு வழங்கினார் கருஜெயசூரிய.

அடுத்தவர் ரணில். இவர் எந்தத் தரப்புக்குமே நம்பகரமாக நடக்கவில்லை. (குறிப்பாக தமிழ்த் தலைமைக்கு) ஆனாலும் பூதக்கண்ணாடியேனும் வைத்து ரணிலுக்கு ஆதரவு வழங்க காரணங்களைத் தேடுகின்றது கூட்டமைப்பு. மஹிந்தவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமராக நியமித்தபோது தலைகீழாக நின்று அந்த முயற்சியை முறியடித்தது. இந்த ஆற்றலின் ஐந்து வீதத்தையேனும் அரசியல் கைதிகளின் விடுதலை, கல்முனை பிரதேச செயலகம் தரமுயர்த்தல் முதலானவற்றில் காண்பிக்கவில்லை. எவர் தலைகீழாக நின்றாலும் இனிமேல் ரணிலுக்கு வாக்களிக்க தமிழர் அக்கறை காட்டமாட்டார்கள் என்ற உண்மை கூட்டமைப்புக்கும் உறைத்திருக்கும். குறிப்பாக உயிர்த்த ஞாயிறு சம்பவங்களின் பின், ரணில் தனது சுயரூபத்தைக் காட்டினார். அப்பாவி முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பது சகலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். ஆனால், அதை ரணில் சொன்னவிதம் - நோக்கம் எந்தக் காலத்திலும் முஸ்லிம்களும் தமிழரும் ஒன்றிணைந்து விடக்கூடாது என்ற குள்ளநரித்தனத்தின் வெளிப்பாடு. 'புலிகளை ஒடுக்க உதவிய முஸ்லிம் மக்களை நாம் கைவிடமுடியாது", என்று சொன்னதன் மூலம் தமிழ் - முஸ்லிம் முரண்பாட்டின் கொதிநிலையை அப்படியே பேண விரும்புகிறார் என்பதை வெளிப்படுத்தினார். தற்போதைய சூழ்நிலையில் இவருக்காக வாக்குச் சேகரிக்க கூட்டமைப்பு முயன்றால் நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபை பிரதிநிதித்துவங்களையும் மறக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடும்.


சொந்தக் கட்சியினருக்கும் குழிபறிப்பதில் வல்லவர் ரணில் இவரது மாமன் ஜே.ஆர். கட்சித் தலைவர் ஆனவுடன் முன்னைய தலைவர் டட்லியின் பரம்பரையே அரசியலில் இருக்கக்கூடாது என எண்ணினார். டெடிகம தொகுதியின் எம்.பியாக இருந்த டட்லியின் பெறாமகன் ருக்மன் சேனநாயக்கவுக்கு 1977 தேர்தலில் போட்டியிட வேட்பாளர் நியமனம் வழங்கவில்லை. ஒருவேளை ருக்மன் சுயேச்சையாகப் போட்டியிட்டால் என்ன செய்வது என்று எண்ணி தலதா மாளிகையின் தியவதன நிலமேயை வேட்பாளராக்கினார். ஆனால் பிரேமதாஸ கட்சித் தலைமையைப் பொறுப்பேற்றதும் ஜே.ஆரின் மருமகன் ரணிலைப் புறக்கணிக்கவில்லை. இளைஞர் விவகார அமைச்சராக இருந்த ரணிலை கல்வி அமைச்சராக்கி அழகு பார்த்தார். எனினும் ஜே.ஆரின் பரவணிப் புத்தி ரணிலுக்கும் இருந்தது. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட ஹேமா பிரேமதாஸ விரும்பினார். வேட்பாளர் நியமனம் வழங்குவதாக அவரை நம்ப வைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார் ரணில். அதை நம்பி தனது ஆதரவாளர்களுடன் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் தினமன்று கொழும்புக் கச்சேரிக்கு சென்றார் ஹேமா. அங்கு போன பின்புதான் தெரிந்தது அவரது பெயர் வேட்பாளர் பட்டியலில் இல்லையென்று. அவமானத்துடன் திரும்பினார்.


அவர் இந்நாட்டின் முதற்பெண்மணியாக இருந்தவர். வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்குவதா இல்லையா என்பதை கட்சித் தலைவர் என்ற ரீதியில் ரணில் முடிவு செய்யலாம். ஆனால் நம்ப வைத்துக் கழுத்தறுப்பது தான் பரவணிப் புத்தி என்பது. மூன்றாம் தரப்பு நபர் ஒருவர் மூலமேனும் உங்கள் பெயர் வேட்பாளர் பட்டியலில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திய பின் கச்சேரிக்கு செல்லுங்கள் என ஒரு தொலைபேசித் தகவல் மூலமேனும் ஹேமாவுக்குத் தெரிவித்திருக்க முடியாதா? அவரை அவமானப்படுத்துவதில் என்ன குரூர திருப்தி ரணிலுக்கு.

அடுத்தவர் சஜித். தனது தந்தை ஆரம்பித்து செயற்படுத்திய பத்து இலட்சம் வீட்டுத் திட்டம், தற்போது தான் செயற்படுத்தி வரும் வீட்டுத் திட்டங்கள் என்பனவற்றை முதலீடாக வைத்துக் களமிறங்குகிறார். சராசரியாக ஒரு வீட்டில் 3 வாக்குகள் என்றால் குறைந்தது 30 இலட்சம் வாக்குகளாவது அதன் மூலமாகத் தேறும் என்பது அவரது கணக்காக இருக்கலாம். நீதியமைச்சர் தலதா அத்துக்கோரள, நிதியமைச்சர் மங்களசமரவீர, பிரதியமைச்சர் ராதாகிருஷ்ணன் போன்றோர் வெளிப்படையாகவே ஆதரவு தெரிவிக்கின்றனர். ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் குறித்து வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்க வேண்டாம் என ரணில் அறிவித்த பின்னரும் தலதாவும், மங்களவும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். ஏற்கனவே லலித்துடன் கட்சி மாறிப் போன ரவிகருணநாயக்க சஜித்தைக் கடுமையாக எதிர்த்து வருகிறார். ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்குபவர்களே சஜித்தை எதிர்க்கின்றனர் என்பதும் அவருக்கு ஒரு பலம்தான்.

ஆனால், சாதிவெறி பிடித்த சிங்களம் இவரை எந்தளவுக்கு ஏற்கும்? சந்திரிகா ஜனாதிபதியானதும் பிரேமதாஸ இருந்த கதிரையில் அமர விரும்பவில்லை. ஜனாதிபதி மாளிகையில் இருந்து ஆட்சி செய்யவில்லை. ஒரு கறுப்பரான ஒபாமா வெள்ளை மாளிகையில் இருந்து ஆட்சி புரிந்தார் என்பதற்காக அடுத்து வந்த ட்ரம்ப் வேறு இடத்தில் இருந்தா ஆட்சி புரிகிறார். இல்லையே...! அடிமனதில் சந்திரிகாவுக்கு இருந்த சாதித் திமிரே அலரி மாளிகையில் இருந்து ஆட்சி செய்ய வைத்தது. ரவி கருணாநாயக்க அன்று பிரேமதாஸவையும் இன்று சஜித்தையும் எதிர்ப்பதற்கான காரணம் எழுதத் தேவையில்லை.

மகாநாயக்கர்கள் கட்சி மாறிச் சென்ற கருஜெயசூரியவுக்கு அளித்த கௌரவத்தை எந்த அவமானத்தையும் தாங்கிக் கொண்டு கட்சியிலேயே அங்கத்துவம் வகிக்கும் சஜித்துக்கு வழங்குவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. எனினும் வெல்லக்கூடிய வேட்பாளர் தேவை என மங்கள கூறும் விடயம் சஜித்தின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. அடுத்த தரப்பு கோத்தாவைக் களமிறக்கினால் முஸ்லிம்கள் அவருக்கு எதிராகவே வாக்களிப்பர். தமிழர் தரப்பிலும் ரணிலுக்கு எதிரான உணர்வுபோல் சஜித்துக்கு இல்லை. சும்மா சுமந்திரனும் சம்பந்தனும்தான் ரணிலைத் தோளில் சுமக்கிறார்கள். யுத்தம் மும்முராக நடந்தபோது பிரேமாஸவைக் காப்பாற்ற பிரபாகரன் முடிவெடுத்தார் என்பது வரலாறு. அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது ஈரோஸ் சார்பில் பதவிப் பிரமாணம் செய்து பிரேமாவைக் காப்பாற்றுமாறு சீ.வீ.கே., சிவனடியார் உட்பட சிலரை அனுப்பியதும் நினைவுகூரத்தக்கது. எனினும் சிங்களத்தின் சாதித் திமிர் சஜித்தை எந்தளவுக்கு ஏற்கும் என்பது ஓரிரு மாதங்களில் தெரியவரும்.






# யாழ்ப்பாண கொழுக்கட்டை

கொழுக்கட்டை இலங்கையர்களும் தென்னிந்தியர்களும் விரும்பி உண்ணும் இனிப்பு வகை சிற்றுண்டி ஆகும். இந்து சமயத்தில் மட்டுமல்ல தமிழர் சடங்கிலும் கொழுக்கட்டை முக்கிய இடம்பெறுகிறது.

பச்சரிசி மா, தேங்காய்ப்பூ, சர்க்கரை என்பன கொழுக்கட்டையின் மூலப் பொருட்களாக உள்ளன. இது நீராவியில் அவித்துச் செய்யப்படுகின்றது.

இலங்கை, யாழ்ப்பாணத்தில் செய்யப்படும் கொழுக்கட்டைகளில் பயறு முக்கிய இடம் பெறுகிறது. உள்ளுடன் இல்லாது கொழுக்கட்டை செய்யப்படுவது யாழ்ப்பாணத்து முறையாகும்.

பல்லு கொழுக்கட்டை, பிடி கொழுக்கட்டை, பால் கொழுக்கட்டை என கொழுக்கட்டையில் வகைகள் உண்டு.




# கெண்டி

நம் மூதாதையர் தங்கள் குழந்தைகளுக்கு பால், தண்ணீரை அளவாகப் பருக்கப் பயன்படுத்தப்பட்டதே கெண்டி. அதாவது நம் மூதாதையர்களின் சூப்பிப் போத்தல் இதுதான்.

பெரும்பாலும் பித்தளையில் உருவாக்கப்படும். ஆலயங்களில் தீர்த்தம் வழங்குவதற்கும் கெண்டியே பயன்படுத்தப்பட்டது. இப்போதும்கூட ஒரு சில ஆலயங்களில் இது புழக்கத்தில் உள்ளது.

ஆனால், கடந்த நூற்றாண்டிலேயே இந்தப் பாரம்பரியம் நம்மிடம் இருந்து மறைந்து விட்டது. தொல்பொருட் காட்சிச் சாலைகளும் பழம்பொருள் சேகரிப்பாளர்களுமே தஞ்சமென இந்தக் கெண்டிகள் கிடக்கின்றன.



# கந்தரோடை

ஈழத் தமிழர்களின் தொல்லியல் எச்சங்களில் கந்தரோடை மிகக் காத்திரமான ஆய்வுக்கு வழிவகுக்கும் இடம் ஆகும்.

சுன்னாகம் கந்தரோடை என அறியப்படும் இந்த இடம் முன்னைய காலத்தில் கதிரமலை என அறியப்பட்டதாகும். இங்கு பௌத்த மதம் நிலவியது என்பதற்கு ஆதாரம் உள்ளபோதும், தமிழர்கள் முன்னர் பௌத்த மதத்தைப் பின்பற்றினர் என்றும் சிங்களவர்கள் வரலாற்றுத் திரிபுடன் இது சிங்களவர் பூமி என்று உரிமை கோருவதாகவும் உள்ளது.

இங்கு கிடைத்துள்ள பொருட்களை ஆய்வு செய்யுமிடத்தில் இவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது உறுதியாகியுள்ளது. ஆனால், இங்கு தமிழ் கல்வெட்டுக்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இதன் வரலாறு பூரணமான முறையில் வெளிச்சம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

# அங்கினை

யாழ்ப்பாணத்து தமிழர்களின் பேச்சு வழக்கில் 'அங்கினை எங்கேயும் கிடைக்குமா?" என்றவாறான சொற்களைக் கேட்க முடியும்.

'அங்கினை" என்ற சொல், அங்கே, அந்த இடத்தில் அதாவது ஒரு இடத்தைக் குறிப்பதாக இருக்கும். உதாரணமாக ஒருவர் தான் இருக்கும் இடத்தில் ஒரு பொருள் கிடைக்கவில்லை என்றால், வேறு இடத்தில் இருப்பவரை சந்திக்கும்போது 'அங்கினை எங்கேயும் கிடைக்குமா?" என்று கேள்வி எழுப்புவார்.


வடக்கு தமிழர்களின் வாழ்வியலோடு ஒன்றித்துப்போன இந்தச் சொல் நம் முன்னைய தலைமுறையுடன் அருகிப் போய்விட்டது.

# திருச்செல்வர் காவியம்

ஈழத்தின் முதல் கிறிஸ்தவ காவியம் திருச்செல்வர் காவியமே என்பது அறிஞர்களின் கருத்து. இதை தெல்லிப்பழையைச் சேர்ந்த பூலோகசிங்க அருளப்ப நாவலர் என்பவர் 1896 இல் வெளியிட்டார்.

இந்நூலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறை தலைவராக ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் 1997 இல் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார்.

இந்நூல் 24 படலங்களைக் கொண்டது. கதை, திருச்செல்வர் என்பவரின் வரலாறு புனைவுகளுடன் கூறப்படுகிறது. இக்கதை கௌதம புத்தரின் வரலாற்றுக் கதையையே புனைவாக வெளியிட்டார் என்ற சர்ச்சையும் இந்நூல் குறித்து உண்டு.



# குற்றத்துக்கு துணை போகின்றோமா?

- பாலகணேஸ்

விக்தோர் ஹ்யூகோவின் 'மரண தண்டனைக் கைதியின் இறுதிநாள்' வாசித்து முடிக்கும்பொழுது உங்கள் வாழ்க்கையில் மனிதம் என்பது என்னவென்று உணர்ந்து கொள்வீர்கள். குற்றம் என்னவென்றே சொல்லாமல், ஒரு மரண தண்டனை அளிக்கப்பட்ட கைதியின் இறுதி ஆறு வாரங்களை முன்வைத்து நிகழும் சம்பவங்கள் மட்டுமே இந்த நாவல். கொஞ்சம் கொஞ்சமாக உங்களது வயிற்றில் ஒரு கத்தி இறக்கப்பட்டால் எவ்வுளவு கொடூரமானதாக இருக்குமோ அத்தனை வன்மையானதாகவே நாவல் எனக்குள் இறங்கியது.




ஒரு சமூகத்தில் நீதியின் பெயரால் ஒருவன் கொல்லப்படுகிறான் என்பதே எத்தகையை முரண், அதற்காகவா நீதி? அப்படியென்றால் உங்கள் நீதியில் ஏதோ பிழை இருக்கிறதென்றல்லவா பொருள். இந்த நாவல் அதையே தன்போக்கில் உணர்த்துகிறது. இதில் மிகவும் கவனிக்கத்தக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன. குற்றம் எதுவாகினும் அதற்கு மரண தண்டனை என்பது தவறு, நாவலில் எவ்வித பெயரும் இல்லாத, செய்த குற்றம் என்னவென்று சொல்லப்படாமலே கதையின் முக்கிய கதாபாத்திரத்தின் பார்வையில் தொடங்குகிறது. அதன் பார்வையிலேயே முழு நாவலும் சொல்லப்படுகிறது. இதுவே பார்வையாளன் மீது வைக்கப்படும் மிகப்பெரும் கேள்வி எனலாம். ஏனெனில் நாம் குற்றத்தின் அளவீடுகள் பொறுத்தே தண்டனைகளை வழங்கிப் பழக்கப்பட்டவர்கள், ஆனால் நாவல் அதற்கு எதிரான நிலையில் நின்று நம்மை விவாதம் செய்ய அழைக்கிறது. அதன் வழியே மரண தண்டனை என்பது எந்தக் குற்றவாளிக்கும் கொடுக்கக்கூடாது என்பதை மிக அழுத்தமாக நிறுவுகிறது.

இன்னும் மிக முக்கியமாக முன்வைக்கப்படும் கேள்வி மக்களின் கூட்டு மனசாட்சி இயங்கும் முறையும், குற்றவாளியின் குடும்ப நிலை குறித்துமான உரையாடலை நோக்கியது. இந்த நாவல் வாசிக்கும்பொழுது எனக்கு மிகவும் பிடித்த திரைப்படமான 'ஷசாங்க் ரெடெம்ஷனின்' ரெட் கதாபாத்திரம் நினைவுக்கு வந்து என்னை கட்டிக் கொண்டு இம்சை செய்தது. படத்தின் முடிவுக்குச் சற்று முன்பு பரோல் வாங்கும்போது ரெட் கதாபாத்திரம் மிக அழுத்தமாக வெளிப்படுத்தும் விடயம் திருந்துவது என்பது என்ன என்ற உரையாடலைத்தான். அதன் இன்னொரு வடிவமாகவே இந்த நாவலில் மரண தண்டனைக் கைதிகளின் உலகத்தை என்னால் பார்க்க முடிந்தது.

நாவலில் மன்னிப்பை எதிர்நோக்கி அந்தக் கைதி ஏங்கும்பொழுதும் சரி, தன் ஒரே நம்பிக்கையான மகளுடனான உரையாடலின் போதும் சரி எனக்குள் தோன்றியதெல்லாம் நாம் வாழ்கிற வாழ்க்கையில் ஒரு உயிரின் நீதியின் பெயரிலான அநீதியான மரணம் என்பது எத்தகைய கொடியது என்பதைத்தான். ஒரு செய்திச் சனலைப் பார்த்து அதில் உணர்ச்சிபூர்வமாகக்

(22ஆம் பக்கம் பார்க்க)




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை' , ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.



## நினதன்பின் நிறப்பிரிகை

திசைவற்றி திமிரழிந்து தூரெரிந்து போனாலு
இசைநரம்பே உன் கிளை பற்றிக் கீற்றாவேன்
தாபச் சுவர் அடர்ந்து அடர்ந்து
அகிற்புகையாய் காதல் சுடர்ந்து திரிந்தாலுப்
கொம்புக்கொழுப்பு கரையாமல்
ஈமத்தில் நிறங்கூட்டும்

பறித்தெடுத்த நாற்றாங்கால்
காலடிகள் நிரம்பிய
மனசில் பனிக்குடத்து நீர் ஊற்றி
களிம்பாற்றிய காருண்ய உள்ளங்கை
தன் ரேகைப்பதியமிட்ட இருதயச் சுவர்

இறந்த உடல்களுடன்
புதையுறும் உப்புப் பரவலில்
கொஞ்சம் கடல் வாசனை மிச்சமிருக்கிறது
விதைகளுக்குள் கனிருசிக்கு
மயங்கி உறங்கும் உயிர்களின்
போதை எத்துணை பேதைமை

அபத்தங்களின் தேவதையாய் இருப்பதும்
மடியுறிஞ்ச முடியாத நோய்மையுள்ள
குழந்தையாய் இருப்பதும்
பிறிதொன்றில்லை

பிடாரன் ஒருநாள்
பாம்பால் மரிப்பது
ஒப்புக் கொண்ட தற்கொலை
அன்பின் இறுதி ஈவு
பிறகொன்றுமில்லை

- நேசமித்

# இன்னொரு பரிமாணம்

- நேசமித்ரன்

'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்' என்ற இந்த நூலின் வாயிலாக அகழ்வாய்வு, மொழியியல், புவியியல், சமூகவியல் போன்றவற்றின் அடிப்படையில் சிந்துவெளிப் பண்பாட்டைப் பற்றிய உறுதியான சான்றாதாரங்களையும் கோட்பாடுகளையும் ஒருங்கிணைத்துத் தன்னுடைய முடிவுகளை அழுத்தமாக முன்வைக்கிறார் நூலாசிரியர் ஆர். பாலகிருஷ்ணன்.

தன்னுடைய புதிய கருத்துகளை மொழியியல், சிந்துவெளி நகர அமைப்பு ஆகிய இரண்டு அடிப்படைகளின் மேல் நிறுத்தி விவாதிக்கிறார் பாலகிருஷ்ணன். தமிழில், அநேகமாக அனைத்து திராவிட மொழிகளிலும், மேல் என்றால் மேற்கு, கீழ் என்றால் கிழக்கு என்ற பொருள் இயல்பானது. இந்த மொழியியல்பின் அடிப்படையிலான எண்ண ஓட்டத்தில் தங்கள் நகர அமைப்புகளை சிந்துவெளி மக்கள் உருவாக்கியுள்ளனர். இதற்கான ஆதாரங்களை ஈரான், ஆப்கானிஸ்தான், பலோசிஸ்தான், பாகிஸ்தான் முதல் இந்தியாவின் மகாராஷ்டிரம் வரை அமைந்திருக்கும் பகுதிகளில் உள்ள சிந்துவெளி நாகரிகத் தடய நகரங்களின் மூலைமுடுக்குகளைத் தேடி, தரவுகளையும் தகவல்களையும் அலசி வடிகட்டித்தருகிறார் நூலாசிரியர்.

அகழ்வாய்வின் மூலம் நமக்குத் தெரியவந்திருக்கும் மாநகரங்களான மொஹஞ்சதாரோ - ஹரப்பாவும் சரி, சிறு நகரங்களான ஸூர்கோட்டா மற்றும் ஸூட்காஜென்தோர் ஆனாலும் சரி, அனைத்து சிந்து சமவெளி நகரங்களிலும் மேடான, உயர்ந்த மேற்குப் பகுதிக் கட்டட அமைப்புகளும், தாழ்வான கிழக்குப் பகுதிக் குடியமைப்புகளும் காணப்படுகின்றன. இந்த அமைப்புகள் எதேச்சையானவை அல்ல. முன்யோசனையின் விளைவு என்று முறையான ஆதாரங்களைக் கொண்டு வாதிடுகிறார் நூலாசிரியர்.

திராவிட மொழிகளில் மட்டுமே புவிமைய (Topo-centric) அடிப்படையில் திசை சுட்டும் சொற்கள் அமைந்துள்ளன. சமஸ்கிருதம் மற்றும் அது சார்ந்த இந்தோ-ஆரிய மொழிகளில் திசை சுட்டும் சொற்கள் மனிதமைய (Anthropo-centric)

(22ஆம் பக்கம் பார்க்க)





# எதிரி யாராகவும் இருக்கலாம் எதிர்த்து நிற்பதே வாழ்க்கை...!

## இது தேன் வேட்டையனின் கதை

உயிர் பிழைத்திருக்கும் விடயத்தில் ஒரு நொடி கிடைத்தாலும் யோசித்து எதிரியிடமிருந்து தப்பிப்பிழைத்தவனையும் இந்த உலகம் பார்த்திருக்கிறது. 10 நிமிடங்கள் கிடைத்தும் பயந்து நடுங்கிச் செத்தவனையும் இந்த உலகம் பார்த்திருக்கிறது. உயிர் பிழைத்திருத்தலில் எந்த உயிரினமாக இருந்தாலும் எதிர்த்துத் தாக்குவதுதான் சிறந்த தற்காப்பு. ஆனால் எல்லா உயிரினங்களும் எல்லா எதிரிகளையும் எதிர்த்து நிற்பதில்லை. சில உயிரினங்கள்தான் எதிர்த்து நிற்கும். அவை இந்த உலகில் நிலைத்திருப்பதற்குக் காரணமே எதிர்த்து நிற்பதுதான்.

தேன்வளைக்கரடி. பைபிளில் தாவீது கோலியாத் பற்றிய ஒரு கதை வரும். பலம் பொருந்திய தாவீதை சிறுவனான கோலியாத் கவண் கல்லால் அடித்துக் கொல்கிற அதே தியரியைப் பின்பற்றும் உயிரினம். உயிர் பிழைத்திருத்தலில் தேன்வளைக்கரடிகளின் கைகள் மற்ற விலங்குகளைக் காட்டிலும் சற்று ஓங்கியே இருக்கின்றன. உருவமெல்லாம் முக்கியமல்ல, யாராக இருந்தாலும் எதிர்த்து நிற்போம் என்பதுதான் தேன்வளைக்கரடிகளின் உயிர் பிழைத்திருப்பின் இரகசியம். இவற்றின் உடலமைப்பும் அதன் தோல் அடர்த்தியும்தான் அதன் பலமே. ஆமையின் ஓட்டைத் துளைபோடும் அளவுக்கு அதன் நகங்கள் கூரானவை. சிங்கமாக இருந்தாலும் இதன் தோலை கிழிக்க முடியாத அளவுக்குப் பலமானவை. இந்த ஒரு தகுதிதான் மற்ற விலங்குகளிடமிருந்து தேன்வளைக் கரடிகளைத் தனித்துக் காட்டுகிறது.

துணிந்து ஒரு முடிவெடுக்க தன்னிடம் சிறந்த ஆயுதம் இருக்கிறது என்பதுதான் இவற்றின் எல்லா செயல்களுக்கும் காரணம். குட்டிகளைப் பெற்றெடுப்பதிலிருந்து, அவற்றைத் அடுத்தடுத்த கட்டங்களுக்குப் பழக்குவது வரைதான் உயிர் பிழைத்திருத்தல் இவற்றுக்குப் போராட்டமே. மற்றும்படி காட்டின் அங்கீகரிக்கப்படாத ராஜாக்கள்தான்.

ஏனைய விலங்குகளிடமிருந்து குட்டியைக் காப்பாற்றுவதற்கு தன்னுடைய இடத்தை அடிக்கடி மாற்றிக்கொண்டே இருக்கும். மண்ணுக்குள் குழி தோண்டி அதற்குள்தான் வசிக்கும். குட்டிக்குத் தொழில் சொல்லிக் கொடுத்து அவற்றைச் சண்டை செய்ய அனுப்புவது வரை உடனிருந்தே கவனிக்கும். புழு, பூச்சி, பாம்பு, தேள், சிலசமயங்களில் மற்ற விலங்குகளின் குட்டிகள் எனக் கிடைக்கிற எல்லாவற்றையும் விருந்தாக்கி விடுவதுதான் இதன் இயல்பு. காடு பல உயிரினங்களின் தகவல்களையும் காற்றில் பரவவிட்டுக்கொண்டே இருக்கும். அதில் ஒரு வாசனையைப் பின்பற்றி துரத்திப் பிடித்து உண்பதுதான் தேன்வளைக்கரடிகளின் உயிர் பிழைத்திருப்பின் மற்றைய இரகசியம்.

நாளொன்றுக்கு 40-லிருந்து 50 சதுர கிலோமீற்றர்கள் உணவுக்காகப் பயணம் மேற்கொள்ளும் கரடிகள், இரகசியமாகப் பதுங்கி இருக்கிற உயிரினங்களின் உலகத்தை வாசனையை வைத்தே கண்டுபிடித்து உணவாக்கிவிடுகின்றன. பாம்புகளைப் பிடித்து கொல்வதும், அவற்றை உண்பதும்தான் சுவாரஸ்யமான விஷயமாக இருக்கிறது. பாம்புகள் நேருக்கு நேராக எதிரிகள் இருந்தால் எளிதில் விஷத்தைப் பாய்ச்சி கொன்றுவிடும். நேருக்கு நேராக எவ்வளவு முயன்றாலும் பாம்புகளைக் கொல்ல முடியாது என்பதால், கரடிகள் வேறு ஒரு யுக்தியைக் கடைப்பிடிக்கின்றன. பாம்புகளுக்குப் பக்கவாட்டில் வந்து தாக்குதலை தொடுப்பதால், பாம்புகளால் கரடிகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் போய் விடுகிறது.

பாம்பு சோர்வடையும் ஒரு சில நொடிகள் போதும், அதன் தலையைப் பிடித்துக் கடித்து விடுகின்றன. தலை எதிரியிடம் சிக்கிவிட்டால் எல்லாமே முடிந்தது என்பதுதான் எல்லா உயிர்களுக்கும் பொதுவான விதி. மலைப்பாம்பாக இருந்தாலும் ராஜ நாகமாக இருந்தாலும் விதிமுடிந்தால் இந்தக் கரடிகளைத்தான் தேடும். ஆம், இதனுடனான மோதல்தான் அவற்றுக்கு எமன். எடை முக்கியமல்ல, தேன்வளைக் கரடிகளுக்கு எதிரியின் தலைதான் முக்கியம்.

காட்டு நாய்க்குட்டி, கழுதைப்புலிகள், சிங்கம், சிறுத்தை, பபூன் குரங்கு போன்ற எல்லா விலங்குகளும் தேன்வளைக்கரடிகளை ஒரு உயிராகக்கூட மதிப்பதில்லை. காரணம் அதன் உருவ அமைப்பு. பார்ப்பதற்குச் சாதுவாகவும் உருவத்தில் சிறியதாகவும் இருப்பதால் மற்ற விலங்குகள் இவற்றைப் பெரிதாக மதிப்பதில்லை. உதாசீனப்படுத்துவதும்கூட ஒருவகையில் பலம்தான் என்பதைக் கரடிகள் உணர்ந்திருந்தன.

ஆயிரத்துக்கும் மேலான முட்களை ஆயுதமாகக் கொண்ட முள்ளம்பன்றிகளிடம் எந்த விலங்குகளும் யோசித்துதான் எதிர்த்து நிற்கும். ஏனெனில், முள்ளம்பன்றிகள் எதிர்த்து நிற்கும் விலங்கை, பின்னால் நகர்த்தி முள்ளால் குத்தியே விரட்டிவிட்டுவிடும். தேன்வளைக்கரடிகளின் தோல் அடர்த்தியின் காரணமாக அவ்வளவு எளிதில் முள்ளம்பன்றி முட்களால் துளைக்க இயலாது என்பதால் அவற்றையும் சில சமயங்களில் தேன்வளைக்கரடிகள் கடித்தே கொன்றுவிடுகின்றன.

தேன் என்றால் எத்தகைய சாகசத்தையும் இவ்வகை கரடிகள் நிகழ்த்தும். மர உச்சியிலோ, மலை உச்சியிலோ இருக்கிற தேன் கூடுகளை அடையாளம் கண்டு அவற்றைக் கரடிகள் முழுதாக ஏப்பமிட்டு விடுகின்றன. தேன்கூடுகளைச் சேதப்படுத்தும்போது கரடி தன்னுடைய காதுகளை மூடிக்கொள்ளும். அதன் தோல் அடர்த்தி காரணமாக தேனீக்களால் கரடியை விரட்ட முடியாமல் போய்விடுகிறது. அதிக மோப்ப சக்தி கொண்ட தேன் வளைக்கரடிகள் எளிதாக எதையும் கண்டுபிடித்துவிடும். அதனாலேயே இவை தேன் வளைக்கரடிகள் என அழைக்கப்படுகின்றன.

வெற்றி தோல்விகள் குறித்துக் கவலைப்படாமல் எதிர்த்து நிற்பதே மிகப் பெரிய தற்காப்பு என்பதை மனித இனம் உட்பட எல்லா உயிரினங்களுக்கும் இவை சொல்கின்றன. தேன்வளைக்கரடிகளின் உயிர்பிழைத்திருப்பில் ஒதுங்கிப் போவதில் இல்லை: எதிர்த்து நிற்பதில்தான் இருக்கிறது. பிழைத்திருப்பதற்குக் காரணமே எதிர்த்து நிற்பதுதான்!



சீறும் நாகத்துடன் சீற்றம் காட்டும் கரடி



சிங்கக் கூட்டம் சூழ்ந்தும் தனியாகச் சீற்றம்



வீழ்த்திய முள்ளம் பன்றியுடன்...



குட்டியைக் கவ்விச் செல்லும் கரடி





கண்ணன் இயக்கத்தில் அதர்வா நடிக்கும் படத்தின் நாயகியாக அனுபமா பரமேஸ்வரன் நடிக்கவுள்ளார்.

3 வருடங்களுக்குப் பிறகு அனுபமா நடிக்கும் நேரடித் தமிழ்ப் படம் இதுவாகும்.



நிவேதா தாமஸ் இப்போது ரஜினியின் தர்பார் படத்தில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் தெலுங்குப் படத்தில் ஜீனியர் என்.டி.ஆர், ரவி தேஜா ஆகியோர் ஜோடியாக நடித்து வருகிறார்.

இதனால் ஹைதராபாத்தில் வீடு ஒன்றை வாங்குவதற்கு திட்டமிட்டுள்ளாராம்.



மித்ரன் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கும் படத்திற்கு ஹீரோ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

கல்யாணி பிரியதர்சன், இவானா என இரு நாயகிகள் நடிக்கும் இந்தப் படத்தில் அர்ஜுன் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

படத்தை நத்தார் விடுமுறையின்போது வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இயக்குநர் மணிரத்னம் "வானம் கொட்டட்டும்" என்ற படத்தைத் தயாரிக்கிறார்.

விக்ரம் பிரபு - மடோனா செபஸ்ரியன் நடிக்கும் இந்தப் . படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ் விக்ரம் பிரபுவின் தங்கையாக நடிக்கிறார். சரத்குமார் - ராதிகா ஜோடியும் இந்தப் படத்தில் நடிக்கின்றனர்.

திருமணத்துக்கு பிறகும் முன்னணி நாயகியாக வலம் வருகிறார் சமந்தா. அடிக்கடி சமூகவலைத்தளத்தில் கவர்ச்சிப் படங்களைப் பதிவிட்டு வருவது பல விவாதங்களை கிளப்பியது.

இந்நிலையில் அவர் நடித்துள்ள ஓ பேபி பட நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது உடுத்தியிருந்த உடை சரச்சைக்குள்ளாகியுள்ளது.

உடையின் மேற்புறத்தில் நீளமான இடைவெளி ஆபாசமாக உள்ளதாக சர்ச்சை கிளப்பியுள்ளது.

நடிகை நிக்கி கல்ராணியின் சகோதரி சஞ்சனா கல்ராணி தெலுங்கு, கன்னட, மலையாளப் படங்களில் நடித்து வருகிறார்.

இப்போது அருண் விஜய் நடிக்கும் 'பாக்ஸர்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகிறார். படத்தில் அவருக்கு முக்கியமான வேடமாம்.

ஹிந்தியில் வெளியாகி பெருவெற்றி பெற்ற படம் விக்கி டோனர். தற்போது தாராளபிரபு என்ற பெயரில் தமிழில் மீளுருவாகிறது.

இந்தப் படத்தில் ராதிகா ஆப்தே தான் முதலில் கதாநாயகியாக ஒப்பந்தமானார். ஆனால், விடுமுறையை காலத்தில் அதிகமாக பியர் அருந்தி, கட்டுப்பாடின்றி உணவை உண்டு எடை கூடியதால் அந்த வாய்ப்பு பறிபோய்விட்டதாக அவரே கூறியுள்ளார்.







# கந்தகம் சுமந்த உத்தமரின் எழுச்சிநாள்

■ தமிழரசன்


முதற் கரும்புலி
கப்டன் மில்லர்


கடற்கரும்புலி
மேஜர் காந்தரூபன்


கடற்கரும்புலி
கப்டன் கொலின்ஸ்


கடற்கரும்புலி
கப்டன் வினோத்


கரும்புலி
லெப்.செங்கண்ணன்


முதல் பெண்
கடற்கரும்புலி
கப்டன் அங்கையர்க்கண்ணி


தரைக்கரும்புலி
மேஜர் யாழினி


வான் கரும்புலி
கேணல் ரூபன்


வான் கரும்புலி
லெப். கேணல்
சிரித்திரன்

ஒவ்வொரு தமிழனின் விழிகளும் நெருப்பைக் கக்கும் நாள் ஜூலை 05 – கரும்புலிகள் நாள். எவருக்கும் புரியாத புதிரான மனிதர்கள் இந்தக் கரும்புலிகள். இரும்பைப் போன்ற உறுதியான நெஞ்சும் எவருக்கும் இல்லாத மென்மையான இதயமும் கொண்டவர்கள். ஈழத் தமிழரின் கந்தகக் காவலர்கள் – உயிராயுதங்கள். உலகில் எவருக்கும் கிட்டாத பெருமைகளை எம்மினத்துக்கு சேர்த்த தியாகிகள்.

மக்களை காக்கத் தங்களையே கொடுக்கும் இந்த வீரமறவர்கள்தான் புலிகளின் அதி அற்புத சக்தி வாய்ந்த ஆயுதங்கள். எந்த ஆயுதத்துக்கும் அஞ்சாத எதிரிகள் "கரும்புலிகள்" என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே தெடைநடுங்கி ஓடுவர். ஆனால் தமிழர்களோ மகிழ்ச்சியில் திளைத்தாடுவர். இலட்சியத்த்தை மட்டுமே குறியாகக் கொண்டு நகரும் கரும்புலிகளிடம் "மக்கள் நலன்" என்பதைத் தவிர வேறு எதுவும் இருந்ததில்லை.

தற்காலப் போரியல் வரலாற்றில் முதல் தற்கொடைத் தாக்குதல் இரண்டாம் உலகப் போரில் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலை ஜப்பானியர்கள் நடத்தினர். தோல்வியைத் தழுவும் கட்டத்தில் ஜப்பானியப் படைகள் இருந்தபோது கமிகசே என்ற அவர்களின் வான்படை வெடி மருந்துடன் அமெரிக்காவின் கப்பல்களை தாக்கி மூழ்கடித்தன. இதன் பின்னர் விடுதலைப் போரியல் வரலாற்றில் தற்கொடைத் தாக்குதல்களைப் பல அமைப்புகளும் பயன்படுத்தினர்.

ஈழப்போரியல் வரலாற்றில் முதலாவது தற்கொடைத் தாக்குதல் 1987 ஜூலை 5 ஆம் நாள் இடம்பெற்றது. கப்டன் மில்லர் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது நடத்தினார். கப்டன் மில்லர் யாழ்ப்பாணம் – வடமராட்சி – துன்னாலையை சேர்ந்தவர். வல்லிபுரம் வசந்தன் என்ற இயற் பெயர் கொண்ட இவர் இளம் வயதிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டவர். மக்களையும் – மண்ணையும் மிகவும் நேசித்த இவரால் ஒப்ரேஷன் லிபரேஷன் நடவடிக்கை மூலம் வடமராட்சி இராணுவம் வசம் வீழ்ந்ததை ஏற்க முடியவில்லை.

குறைந்த ஆயுதவளம் – படை பலத்துடன் நின்ற புலிகளால் பெருந்தொகை ஆயுதங்கள் படைகளுடன் வந்து நின்ற இராணுவத்தை எதிர்த்து வெற்றி பெறுவது என்பது கனவாகவே இருந்தது. இந்தச் சமயத்தில் எப்படியாவது வடமராட்சியை இராணுவத்திடம் இருந்து மீட்டுவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தனர் புலிகள். இச்சமயத்தில்தான் தலைவர் பிரபாகரன் கரும்புலித் தாக்குதல் திட்டத்தை தீட்டினார். ஆனாலும் அவரின் திட்டம் வெடிமருந்து வாகனத்தை கொண்டு சென்று நிறுத்திப் பின்னர் வெடிக்க வைப்பதாகவே இருந்தது. இதற்கு முன்னர் எடுத்த திட்டம் தோல்வியில் முடிந்திருந்ததால் திட்டத்தை செயற்படுத்தத் தெரிவாகியிருந்த கப்டன் மில்லர் வாகனத்துடன் முகாமுடன் மோதி வெடிப்பது என்ற தனது எண்ணத்தையே ஈடேற்றினார்.

இந்தக் கரும்புலித் தாக்குதல் தான் புலிகள் என்றாலே இராணுவத்துக்கு மிகப்பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. இதன்பின், கரும்புலிகளை நினைத்தே படையினர் முகாம்களில் நித்திரையின்றி தவித்தனர். கடலில் தொடர்ந்த கடற்படையின் அட்டகாசங்களை அடக்கத் தலைவரின் அனுமதியுடன் புறப்பட்டனர் உயிராயுதங்கள் கப்டன் கொலின்ஸ் (பர்ணாந்து சில்வெஸ்டர் – மன்னாற்), மேஜர் காந்தரூபன் (யோகராசா கோணேஸ்வரன் – வல்வெட்டித்துறை), கப்டன் வினோத் (வேலுப்பிள்ளை திலகராசா – வல்வெட்டித்துறை) ஆகியோர் வல்வெட்டித்துறை கடலில் எடித்தார கப்பலை10.07.1990 அன்று தகர்த்தழித்தனர். இந்தத் தாக்குதலே புலிகள் கடலில் நடத்திய முதல் கரும்புலித் தாக்குதலாக அமைந்தது. இதன் பின்னர் கப்பல்களில் அராஜகம் புரிந்த கடற்படையினரும் தொடை நடுங்கிகளாகினர்.

தன் பிள்ளைகளைக் காக்க தாய் தன்னையே அழிக்கத் துணிந்தவள். அத்தகையவர்களே கரும்புலிகளும். அந்தத் தாய்மையின் படைப்பான பெண்கள் தன் இனத்துக்காக களங்கள் பலவற்றில் சமராடி ஆண்களுக்கு சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்திருந்தனர். அத்தகையவர்கள் கரும்புலிகள் அணியிலும் நுழைந்து எதிரிகளை அலற வைத்தனர். இந்த வரிசையில் முதல் பெண் கரும்புலியாக களம் புகுந்தவர் கப்டன் அங்கயற்கண்ணி (துரைசிங்கம் புஸ்பகலா – மண்கும்பான்) இவர் 16.08.1994 அன்று காங்கேசன்துறையில் கட்டளை டோராப் படகை தகர்த்து கரும்புலியாக வீரச்சாவடைந்தார். கடலில் அங்கயற்கண்ணி சாதித்ததை தரையில் சாதித்தார் மேஜர் யாழினி (சிவசுப்பிரமணியம் ராகினி – சேமமடு, வவுனியா) இவர் 06.10.1997 அன்று தாண்டிக்குளம் ஆயுதக்களஞ்சியத்தில் தன்னை ஆகுதியாக்கினார்.

ஈழத் தமிழரின் துயர் கண்டு கொதித்த தாய்த் தமிழகத்தின் புதல்வன் தனுஸ்கோடி செந்தூர பாண்டியன் விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடினான். சிவகாசி – சாத்தூரை சேர்ந்த இந்த வீரமறவன் லெப்டினன்ட் செங்கண்ணன் ஆக 11.11.1993 அன்று ஒப்ரே ஷன் தவளை நடவடிக்கைக்கு வலுச் சேர்ப்பதற்காக பலாலிப் படைத்தளத்தில் நடத்திய சிறப்பு நடவடிக்கையில் வீரகாவியமானார்.

இனி நகரமுடியாது – அடுத்த கட்டத்துக்கு செல்ல முடியாது என்ற நிலையில்தான் கரும்புலிகள் களமிறங்குவர். தங்களை ஆயுதமாக்கி தடைகளை அகற்றி வெற்றியைப் பெறுவதுதான் கரும்புலிகளின் தாக்குதல் பாணி. தமக்கு குறைந்த இழப்பையும் எதிரிக்கு பெரும் இழப்புகளை ஏற்படுத்துவதில் இவர்கள் வல்லவர்கள். களத்தில் தடை அகற்றிகளாகப் பரிணமித்த கரும்புலிகள் பின்னாளில் அதிசிறப்பு அணியாக உருவெடுத்தனர். வெற்றி அல்லது வீரமரணம் என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்ட இவர்கள் கட்டுநாயக்கா, அநுராதபுரம் விமான நிலையத் தாக்குதல்களில் சிறப்பு அணியாக தங்களை நிரூபித்திருந்தனர்.

தரையிலும், கடலிலும் நிரூபித்த புலிகள் ஆகாயத்தையும் தம் வசப்படுத்தியபோது வான் கரும்புலிகளும் உருவாக்கம் பெற்றது. இறுதிப் போர் நடவடிக்கையின்போது கேணல் ரூபன், லெப்.கேணல் சிரித்திரன் ஆகியோர் இரும்புப் பறவைகளை கந்தகப் பறவைகளாக்கி முதல் வான் கரும்புலிகள் என்ற பெருமையைப் பெற்றனர்.

சாவுப் பயத்தில் மூழ்கித் திரியும் பலரிடையே தமது சாவுக்கு நேரம் குறித்து வெடி மருந்தை உடலில் சுமந்து செல்லும் இவர்கள் எத்தகைய உறுதி வாய்ந்த நபர்கள்? ஒருவரா இருவரா? ஒருவர் பின் ஒருவராக எத்தனை நூறுபேர் கரும்புலிகளாகி எதிரிகளை அழித்து எம்மினத்தைக் காத்தனர். இவர்களுக்கு முகமோ, பெயரோ, ஏன் இறுதியில் கிட்டும் ஆறடி நிலம்கூட இல்லை என்றும் தெரிந்தும் எதற்காக இவர்கள் தங்களைக் கொடையாக்கினர். அவர்கள் மண் மீதும், இனத்தவராகிய எம் மீதும் கொண்ட பாசம் என்பதைத் தவிர வேறு எதுவாக இருக்கமுடியும்?

தங்களின் தியாகங்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைத்ததா? இறுதி வெற்றியைப் பெறுவோமா என்ற கேள்விகளுக்கு விடை தெரியாமல் தலைவன் என்ற ஒருவர் மீது வைத்த நம்பிக்கையில் கந்தகங்களை சுமந்து சென்ற மறவர்களை இன்று வெளிப்படையாக நினைவேந்த முடியாத நிலையே உள்ளது. ஆனாலும் இவர்களின் தியாகத்தை – முகமறியா இந்த நாயகர்களை உலகத் தமிழர்கள் என்றும் மறக்கப் போவதில்லை. பல நூறாண்டுகள் கழியினும் இந்த நெருப்பு மனிதர்கள் சரித்திரத்தில் வாழ்ந்துகொண்டே இருப்பர்.



# இரவுக்காக காத்திருக்கும் பகலாடி விலங்குகள்




யாழ்ப்பாண நகரத்தில் சிறுவர்கள் விளையாட மைதானம் இல்லை. மாலை நேரங்களில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒரே நேரத்தில் பல குழுக்கள் கிரிக்கெட் விளையாடுவதை நம்மால் பார்க்க முடியும். ஒரு குழுவின் பந்தை வேறு குழுவின் களத்தடுப்பாளர் எடுத்துப்போடுவதை சகஜமாகக் காணலாம். வெளியாட்களுக்கு யார் எந்தக் குழு என்றே தெரியாது. அந்தத் திடலுக்கு ஒரு சண்டியர் கூட்டம் கிரிக்கெட் விளையாட வருகிறது என்றால் என்னவாகும்? சிறுவர்களும் பிரச்சினை ஏதும் வேண்டாம் என்று நினைப்பவர்களும் ஒதுங்கிக் கொள்வார்கள். சண்டியர்கள் வராத நேரத்தில் மற்றவர்கள் அங்கு வந்து விளையாடுவார்கள். அந்தத் திடலை நம் பூமியாகக் கற்பனை செய்துபாருங்கள். மனிதர்கள் என்ற சண்டியர்கள் மற்ற உயிரினங்களுக்கு, முக்கியமாகப் பாலூட்டிகளுக்கு அச்சம் ஏற்படுத்தி, அவற்றின் இயல்பான பழக்கங்களையே மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் வெளியான ஆய்வொன்றின்படி, மனிதர்களின் குறுக்கீட்டுக்கு அஞ்சி பல்வேறு பாலூட்டி விலங்குகள் இரவுநேர விலங்குகளாகிக் கொண்டிருக்கின்றன.

பகலில் ஓய்வெடுத்துவிட்டு இரவில் சுறுசுறுப்பாக இரைதேடி உண்ணும் விலங்குகளுக்கு இரவாடிகள் (Nocturnal Animals) என்றும், இரவில் ஓய்வெடுத்துவிட்டுப் பகலில் இரைதேடுவது உள்ளிட்ட செயல்களில் ஈடுபடும் உயிரினங்களுக்குப் பகலாடிகள் (Diurnal Animals) என்றும் பெயர். இன்னும் வெவ்வேறு நேரத்துக்குத் தகுந்தவாறு பலவகைப் பிரிவுகள் இருக்கின்றன. இப்படிச் செயற்படும் நேரத்தை உயிரினங்கள் தேர்ந்தெடுப்பதற்கு உணவு, உறைவிடம், பாதுகாப்பு என்று பல்வேறு காரணிகள் உண்டு. பல லட்சம் ஆண்டுகள் பரிணாமத்தின் விளைவாக இப்படிப்பட்ட பழக்கங்கள் உயிரினங்களுக்கு உருவாகும். ஆனால், மனித இனத்தின் வருகைக்குப் பிறகு, இன்னும் துல்லியமாகச் சொல்வதென்றால் நவீன யுகத்தின் வருகைக்குப் பிறகு, அந்த விலங்கினங்களில் ஏராளமான பாதிப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மனித ஆதிக்கத்தால் உணவு, உறைவிட இழப்பு ஏற்பட்டு விலங்கினங்கள் அழிந்துபோவது, வேறிடங்களுக்குத் துரத்தப்படுவது போன்ற நிகழ்வுகளை நாம் கண்டுவருகிறோம். அதன் தொடர்ச்சியாக இப்போது விலங்குகளின் காலம் சார்ந்த பழக்கவழக்கங்கள் மாறிவருவதையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

உலகெங்கும் ஆறு கண்டங்களில், 62 விலங்குகளை ஆராய்ந்து பார்த்த அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் குழுவினர்தான் இந்த முடிவை வெளியிட்டுள்ளனர். இரவு நேரத்தில் விலங்குகளின் நடமாட்டம் முன்பைவிட 1.36 மடங்கு அதிகரித்திருக்கிறது என்கிறார்கள்.

பெருச்சாளி, மரநாய் போன்றவை இயல்பாகவே இரவு நேரத்தில் இரைதேடி உண்ணும் விலங்குகள்தான். ஆனால், புலிகள் பகல் நேரத்தில்தான் சுறுசுறுப்பாக இருக்கும். நேபாளத்தில் மனித நடமாட்டம் உள்ள இடங்களில் புலிகள் கொஞ்சம் கொஞ்சமாக இரவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். மனிதர்கள் நடமாடும் அதே இடத்தில், எந்தத் தொந்தரவும் இல்லாமல் புலிகள் இரவு நேரத்தில் நடமாடத் தொடங்கியிருக்கின்றன.

இதேபோல் கலிபோர்னியாவில் உள்ள கோயோட் நாய்கள் பகலில் அணில்களையும் பறவைகளையும் கொஞ்சமாக வேட்டையாடித் தின்றுவிட்டு, இரவில் சுதந்திரமாக எலிகள், முயல்கள் போன்றவற்றையும் வேட்டையாடத் தொடங்கியிருக்கின்றன. சிம்பாப்வேயில் சேபில் இரலை மான்கள், பகல் நேரத்தில் நீர் கிடைக்காததால், இரவு நேரத்தில் நீர் தேடி அலைகின்றன.

இதில் என்ன பிரச்சினை... மனிதர்கள் உறங்கிய பிறகு இரை தேடினால் அவற்றுக்கும் நமக்கும் நல்லதுதானே என்று நமக்குக் கேள்விகள் தோன்றலாம். இயற்கை என்பது மிகவும் நுண்ணிய வலைப்பின்னலைக் கொண்டது. பகல் நேர விலங்குகளுக்கும் அவற்றால் வேட்டையாடி உண்ணப்படும் விலங்குகளுக்கும் இடையில் ஒரு சமன்பாடு இருக்கும் அதேபோல் இரவு நேர விலங்குகளுக்கும் அவற்றால் வேட்டையாடி உண்ணப்படும் விலங்குகளுக்கும் இடையில் ஒரு சமன்பாடு இருக்கும். அந்தச் சமன்பாடு தற்போது பாதிப்புக்குள்ளாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனால், பகல் நேரத்தில் வேட்டையாடப்படாத விலங்குகள் அதிகமாகப் பெருகுவதும், இரவு நேரத்தில் அதிகமாக வேட்டையாடப்படுவதால் சில விலங்கினங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவதும் நிகழலாம்.

விலங்கினங்களில் எண்ணிக்கை மாறுபடுவது சுற்றுச்சூழலில் வண்ணத்துப்பூச்சி விளைவைப் போல கடுமையாகப் பிரதிபலிக்கும். இயற்கையில் பரிணாம மாற்றம் என்பது இலட்சக்கணக்கான ஆண்டுகளாக நுண்ணிய மாற்றங்கள் ஏற்பட்டு நிகழ்வதாகும். ஆனால், நவீன யுகத்தில் விலங்குகளின் பரிணாம மாற்றங்கள் முன்பைவிட வேகமாக நிகழ்ந்துகொண்டிருக்கின்றன, விலங்குகளுக்கு மட்டுமல்ல, மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு மனித இயல்பிலும் உடலிலும் நிகழ்ந்துகொண்டிருக்கும் மாற்றங்களும் நிறைய. இயற்கை இவ்வளவு வேகத்தை அனுமதிக்காது என்பதை நாம் உணர்வதில்லை.


இந்தப் பூமி எல்லா உயிரினங்களும் கிரிக்கெட் விளையாடுவதற்கான திடல். மனிதர்களும் விளையாடலாம். அடுத்தவர்கள் வீசும் பந்து நமக்கருகே வந்து விழும்போது, அவர்களை நோக்கித் தூக்கிப் போடலாம். ஆனால், இடையே புகுந்துகொண்டு திடலையே ஆக்கிரமித்தோம் என்றால், ஒரு கட்டத்தில் அந்தத் திடலும் நமக்கு இல்லாமல் போய்விடும் என்பதுதான் உண்மை!

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

85

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா



எந்தக் கஷ்டத்துக்கும் முகம் குடுத்து நீங்கள் அவையளைப் பாப்பியள் எண்டு எனக்குத் தெரியும். உங்களை நம்பித்தான் நான் நிம்மதியாய்க் களமாடுவன்", எனக் கூறிவிட்டு நிறுத்தினான்.

சுந்தரத்துக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. எனினும் தானும் முத்தம்மாவும் திட்டமிட்டிருந்த ஏற்பாட்டை அவனிடம் கூறி அவனின் நம்பிக்கையைச் சிதைக்கச் சுந்தரம் விரும்பவில்லை.

முத்தம்மா திரும்பி சுந்தரத்தின் முகத்தைப் பார்த்தாள். அவன் அந்தப் பார்வையைத் தவிர்த்துக் கண்களை வேறெங்கோ ஓடவிட்டான். சிவம் அதைப் பெரிதாகக் கவனிக்கவில்லை.

"என்ன முத்தம்மா.... எங்கடை அம்மா... ஐயாவையும் உங்கடை தாய், தேப்பனையும் கவனமாய்ப் பாப்பியள்தானே?"

அவள் மீண்டும் ஒருமுறை சுந்தரத்தைப் பார்த்துவிட்டு ஓமெனத் தலையாட்டினாள்.

"முந்தியெண்டால் குட்டிப் போடுவனெண்டு எனக்கு நீ பயப்பிட்டனீ! இப்ப உரிமைக்கார மச்சாள். இப்பவும் பயமே... வாயைத் திறந்து சொல்லன்", என்றான் சிவம்.

அவள் மீண்டும் தயக்கத்துடன், "ஓ... பாப்பன்", என்றாள்.

அவள் 'பாப்பன்' என ஒருமையில் சொன்னதன் அர்த்தத்தை சிவம் புரிந்துகொள்ளவில்லை.

"அப்ப... நான் போட்டு வாறன்", என்றபடியே திருப்தியுடன் வந்தான். சுந்தரமும் முத்தம்மாவும் எழுந்து பின்னால் வந்தனர்.

முற்றத்துக்கு வந்த சிவம் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான். வழமைபோல பார்வதி கண்ணீருடன் வழியனுப்பிவைத்தாள். முருகர் மட்டும், "டேய் தம்பி கெதியாய் ஊருக்குப் போற வழியைப் பார். என்ரை துவக்கைப் பாலம்பிட்டியிலை விட்டிட்டன். வேட்டையாடாமல் கை துறுதுறுக்குது", என்றார்.

"உங்களைப்போலை ஆக்களின்ரை உதவி இருந்தால் வலுகெதியாய் போகலாம்", என்றான் சிவம்.

"நான் எப்பவும் ஆயத்தம்", என்றார் முருகர் பலத்த குரலில். சிவம் மெல்லிய புன்னகையுடன் கையசைத்து அனைவரிடமும் விடைபெற்றான்.

விருந்து நடத்திய களைப்பில் எல்லோரும் நேரத்துக்கே தூங்கி விட்டனர். மண்ணெண்ணெய் தட்டுப்பாடு என்பதால் விளக்குகளையும் அணைத்துவிட்டனர். சுந்தரமும் முத்தம்மாவும் இருந்த கூடாரத்தில் மட்டும் ஒரு அரிக்கன் லாம்பு எரிந்துகொண்டிருந்தது. ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தால் வழங்கப்பட்ட கூடாரங்களில் ஒன்றை விதானையார் புதுமணத் தம்பதிகளுக்காக வழங்கியிருந்தார். முருகரப்பு நல்ல காட்டுத்தடிகள் நட்டு அதை ஒரு அழகான வீடு போன்று அமைத்திருந்தார். பழைய சேலைகளை எடுத்து முன்பக்கமும் பின்பக்கமும் மறைக்கும்படி நன்றாக இழுத்து அவர் கட்டியிருந்தார்.

புதிய கூடாரம், புதிய பாய்கள், புதிய தலையணைகள், புதிய ஆடைகள் என எல்லாமே புதிதாக வாழ்க்கை ஆரம்பிக்கப்பட்ட போதும் சுந்தரமும், முத்தம்மாவும் அந்தப் புதிதுகளின் சுகத்தை அனுபவிக்க முடியாமல் தவித்தனர். சுந்தரம் மேல் கூடாரக் கூரையைப் பார்த்தபடி நிமிர்ந்து படுத்திருந்தான். அருகில் முத்தம்மா கால்களை மடக்கி கைகளால் கட்டியவாறு அமர்ந்திருந்தாள்.

நீண்டநேர மௌனத்தின் பின் சுந்தரம், "முத்து!" என அழைத் தான். அவள, "ம்", என்றுவிட்டு அவனின் முகத்தைப் பார்த்தாள்.

"அண்ணை சொல்லிப் போட்டுப் போனதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

அவள் ஒரு பெருமூச்சுடன், "நான் என்ன நினைக்கிறது! நீங்கள்தான் முடிவெடுக்கவேணும்", என்றாள்.

'இனி நான்தான் முடிவெடுக்கிறது என்ற பேச்சுக்கே இடமில்லை. எதையும் இரண்டு பேரும் சேர்ந்துதான் முடிவு எடுக்க வேணும்"

சில விநாடிகளின் பின் அவள், "இரண்டுபேரும் சேந்து எப் பவோ முடிவெடுத்திட்டம்தானே?" என்றாள்.

"அப்ப நான் ஒரு மாதத்திலை உன்னை விட்டிட்டுப் பிரியிறதை மனமார ஏற்றுக்கொள்ளுறியே?"

அவளின் கண்கள் திடீரெனக் கலங்கின. "கலியாணம் கட்டி ஒரு மாதத்திலை கட்டின புருஷனைப் பிரியிறதை எந்த ஒரு பொம்பிளையும் ஏற்றுக்கொள்ளமாட்டாள்"

"இதைத்தானே நெடுகலும் சொல்லுறாய். எந்த ஒரு பொம்பிளையையும் பற்றி நான் கேக்கேல்ல. நீ என்ன சொல்லுறாய்?"

அவள் எதுவுமே பேசவில்லை. தலையைக் குனிந்துகொண்டு பாயை நகத்தால் கீற ஆரம்பித்தாள்.

சுந்தரம் தொடர்ந்தான். "அண்ணை என்னை நம்பிக் கொண்டுதான் போறான். அவன்ரை நம்பிக்கையையும் மீற முடியேல்லை. ஏற்கனவே நாங்கள் எடுத்த முடிவையும் மாத்த ஏலாமல் கிடக்குது. என்ன செய்யிறது எண்டே தெரியேல்லை"

"அப்ப என்ன செய்யிறது?", என அவள் அப்பாவித்தனமாகக் கேட்டாள்.

"ம் ப்பாப்பம்... நான் நாட்டுக்காகப் போராடுற என்ரை உரிமையை அண்ணை கேட்டதுக்காக விட்டுக் கொடுக்கமுடியாது. எதுக்கும் ஒரு மாதம் இருக்குத்தானே?", என்றான் சுந்தரம் மிகவும் நிதானமாக.

அவள் எதுவும் பேசவில்லை. சுந்தரம் மெல்ல விளக்கை எடுத்து அணைப்பதற்காக ஊதினான். அவள் அவசரஅவசரமாக, "வேண்டாம், நூராதேங்கோ...", என்றாள்.

சுந்தரம், வியப்புடன், "ஏன்?", எனக் கேட்டான்.

அவள் ஒருவித மிரட்சியுடன், "பயமாய்க்கிடக்குது", என்றாள்.

"பயம்... எனக்கோ?"

"இல்ல இருட்டுக்கு"

"அப்ப நல்லாய்ப் பயப்பிடு", என்றுவிட்டு சுந்தரம் விளக்கை அணைத்தான். அவளும் அப்போது அதைத் தடுக்கவில்லை.

திருமணம் முடிந்து மூன்று நாட்களாகி விட்டன. கலியாணக் கலகலப்பு நிறைவடைந்து வீடு இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டது. பார்வதி சுந்தரத்தை நான்காம் சடங்கு முடியுமட்டும் வீட்டை விட்டு வெளியே போகக்கூடாதென்று கட்டளையிட்டு விட்டாள். முருகரப்புவும் அவளுடன் சேர்ந்துவிடவே சுந்தரம் செல்ல முடியாமல் போய்விட்டது. இப்போ வீட்டு பொறுப்பு எல்லாவற்றையும் முத்தம்மாவே பார்க்க ஆரம்பித்து விட்டாள். பார்வதிக்கு இப்போ முத்தம்மாவில் நன்றாகப் பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. எடுத்ததற்கெல்லாம், "முத்து, முத்து", என்றே கூப்பிட ஆரம்பித்துவிட்டாள்.

பரமசிவம், பெருமாள் ஆகியோருக்கும் அவரவர் தேவைகளை அறிந்து கவனமாக அவற்றையும் முத்தம்மா நிறைவேற்றத் தவறவில்லை. நெடுநாள் பழக்கதோஷம் முத்தம்மா, பார்வதியை மாமி என்றழைக்க மிகவும் சிரமப்பட்டாள். 'அம்மா' என்பதே வாயில் வந்தது. ஆனால் பார்வதி கடிந்துகொண்டு 'மாமி' என அழைக்க வைத்தாள். மாமி என அழைக்கப்படுவதில் ஏதோ ஒரு உரிமை இருப்பதாகவே பார்வதிக்குத் தோன்றியது.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்



# மரங்களாகும் நகங்கள்

தன் கைகளை வெட்டிவிடும்படி மருத்துவர்களை இரந்து வேண்டிக் கொண்டிருக்கிறார் ஒருவர். பங்களாதேஷ் நாட்டவரான இவரின் நகங்களின் அபரித வளர்ச்சிதான் இவரது தலையிடி!

பங்களாதேஷ் நாட்டில் இவரை மர மனிதன் என்று அழைக்கிறார்கள். 28 வயதான இவரால் இரவில் நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை.. இவரது நகங்களின் ஓயாத வளர்ச்சி தரும் தொல்லையின் வேதனையை தாங்க முடியாமல் தவிக்கிறார் இவர். இந்த வெளி வளர்ச்சியை அகற்ற இது வரையில் 25 தடவைகள் இவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எவருக்குமே வரக்கூடாத ஒரு விசித்திர நோய் இவரைப் பிடித்தாட்டுகின்றது. கடந்த வருடம், மருத்துவர்கள் இந்த வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி விட்டதாகக் கூறியிருந்தாலும், இப்போது மீண்டும் முன்னரை விட வேகமாக நகம் வளரத் தொடங்கி விட்டதாம். இதே மருத்துவமனையில் ஒரு பத்து வயதுச் சிறுமிக்கும் இதே பிரச்சினைக்காக சத்திரசிகிச்சைகள் பல மேற்கொண்டும் பலன் பூச்சியமாகவே இருந்துள்ளது.

மானிடராய்ப் பிறப்பது அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு... இல்லாமல் பிறப்பது அரிதிலும் அரிது.

# நூற்றாண்டின் பெரியவர்...



இந்த நூற்றாண்டின் பெரியவருக்காக பரிவாரங்களுடன் காத்திருக்கின்றது டோக்கியோ நகரம். யார் அந்தப் "பெரியவர்"? அந்தப் பெரியவர் வேறு யாருமல்ல பூகம்பந்தான். இறுதியாக 1923இல் பெரிய அளவில் கலவரப்படுத்தி, தாக்கி அழித்த பூகம்பம் மீண்டும் 100 வருடங்கள் கழித்து வரும் என்று திடமாக நம்புகிறார்கள் இவர்கள்.


உலகிலேயே அதிக சனத்தொகை கொண்ட நகராக (37 மில்லியன்) இருக்கும் டோக்கியோவை, 2050க்குள் 7 ரிக்டர் அளவைக்கு குறையாத பெரும் பூகம்பம் தாக்கும் என்று நம்பும் இவர்கள், அதிலிருந்து மீள, இப்பொழுது தொட்டே முன்னேற்பாடுகளை செய்யத் தொடங்கியுள்ளார்கள்.

எதிர்பார்க்கும் அளவில் டோக்கியோ தாக்கப்பட்டால் 9,700 பேர் பலியாகுவதுடன் 150,000 பேர் காயப்படுவார்கள் என்பது இவர்களின் கணிப்பு! 30,000 கட்டடங்கள் வரை சேதமாகலாம். 3.39 மில்லியன் தொகையினர் வீடுவாசல் இழந்தவர்களாகலா என்பது மேலதிக கணிப்பு. 1945இல் அமெரிக் குண்டு 100,000 பேரைக் கொன்று, 267,000 கட்டடங்களை எரித்த நிகழ்வின் பின்னர், ரோக்கியோவில் நடக்கவிருக்கும் மிக மோசமான நிகழ்வு இது என்பது , இவர்கள் கணிப்பு. ஆனால் 1923இற்கு பின்னர் ரோக்கியோ நன்றாகவே மாறிவிட்டது. நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய இங்குள்ள வானளாவிய கட்டடங்கள், நாணல்போல ஆடக்கூடியவை. பூங்காக்களில் அவசர கழிவறைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

# வேக வைக்கும் வெப்பம்

யாழ்ப்பாணத்தில் உக்கிர வெயில் குடிதண்ணீர் பஞ்சம் என நாம் திண்டாடிக் கொண்டிருக்க, ஐரோப்பாவும் கொதிக்க ஆரம்பித்துள்ளது. இதனாலேயே பிரான்ஸில் 50 வரையிலான பாடசாலைகளை இழுத்து மூடுமளவிற்கு, வெப்பநிலை நாற்பது பாகையை தாண்டுகிறது. பணக்கார நாட்டுப் பாடசாலைகள்தானே என்று நினைக்கிறீர்களா? ஆனால் இந்தப் பாடசாலைகளில் குளிரூட்டல் வசதி குறைவாம். (அக்கரைப் பச்சைகள் இப்படியும் இருக்கின்றன).


சுவிற்சர்லாந்து, இத்தாலி, ஜேர்மனி, செக் குடியரசு , போலந்து என்று மேற்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சூட்டில் தகிக்கின்றன. ஜேர்மனியில் வெப்பநிலை ஜூன் மாதம் 38.5 பாகையை தாண்டியதில்லை. இந்த வருடம் புதிய சாதனை படைக்கப்படலாம் என்கிறார்கள். சஹாரா பாலைவனத்திலிருந்து வழக்கத்தை விடக் கடுமையான வெப்பக் காற்று வீசுவதால் ஐரோப்பாவின் வெப்பநிலை அதிகரித்துள்ளதாம். ஒரே ஒரு சம்பவத்தை வைத்து புவி வெப்பமயமாதல்தான் காரணமென கூற முடியாது என்றாலும், இயற்கையாகவே அனல்காற்று வீசலாம் என்றாலும், தொடர்ச்சியாக வெப்பம் அதிகரிப்பது, அனல்காற்று வீசுவது இதற்கெல்லாம் பருவநிலை மாற்றம்தான் காரணம். 2003 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் அதிகரித்த வெப்பத்தின் காரணமான 14,000 மக்கள் உயிரிழந்துள்ளார்கள்.



# கிழிஞ்ச... நாகரிகம்

பொதுவாகவே ஐரோப்பிய நாடுகளில், கோடை என்று வந்து விட்டால், ஆணோ பெண்ணோ கட்டைக் காற்சட்டைகளை வெவ்வேறு வடிவங்களில் அணிவதுண்டு. கிழிந்த காற்சட்டை அணியும் பணக்கார பிச்சைக்காரர்கள் தொடக்கம், அரையில் நிற்காமல் நழுவிக் கொண்டிருக்கும் தொளவென்ற பெரிய காற்சட்டைகள் வரை நாகரிக உலகில் நடமாடுகின்றன.

இவைதான் வெயில் கால உடைகளாக இருந்தாலும், பல் கோடை ஆடைகள் அணிபவர்களுக்கு பைத்தியக்காரர்கள் போன்ற தோற்றம் அளிப்பதுமுண்டு. உதாரணத்திற்கு, ஒன்றுக்கு மேல் ஒன்றாக மூன்று ஜோடி ஜீன்ஸ்களை அணிந்தவர்களைக் கண்டிருக்கிறீர்களா? இன்னும் சில இளம் பெண்கள். அணியும் காற்சட்டையின் இடுப்பிற்கு கீழ் பகுதியில் காற்றோட்டத்திற்காக ஒரு துவாரமும் வைத்திருக்கிறார்கள். நல்லதொரு ஜீன்ஸை வாங்கி, அதைப் பல இடங்களில் கத்தரித்து விட்டு, தெரியக்கூடாததை எல்லாம் வெளியார் பார்வைக்கு வைக்கும் சிங்காரிகளும் இருக்கிறார்கள். நல்ல கிழி சீச்... சீ... கிழிஞ்ச நாகரிகம்.



# இனி ரோபோக்களின் இராச்சியம்தான்

2030 ஆம் ஆண்டளவில் உற்பத்தி சம்பந்தமான உலகளாவிய 20 மில்லியன் வேலைவாய்ப்புகள், ரோபோக்கள் கைவசம் போகப் போகின்றன என அதிர்ச்சி செய்தியை வெளியிட்டுள்ளார்கள். தொழிற் பயிற்சி குறைந்த வேலை வாய்ப்புகள் மெல்ல மெல்ல ரோபோக்களிடம் கையளிக்கப்பட்டு வருவதால், சமுதாயத்தில் மன அழுத்தமும், பொருளாதார அழுத்தமும் ஒருங்கே தலை தூக்கியுள்ளன.

ஏற்கனவே தொழிற்சாலைகளில் உற்பத்திப் பணிகளை ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட வேலைவாய்ப்புகளை பறித்து விட்டன. இப்போது கணனி அறிவின் விருத்தி, ஒருவர் பேசுவதை இயந்திரங்கள் கிரகிக்கும் திறனில் முன்னேற்றம் போன்றன ரோபோக்களின் வேலை வாய்ப்புகளை பெருமளவு அதிகரித்துள்ளன. இதன் விளைவாக உற்பத்தி அதிகரிப்பும், பொருளாதார வளர்ச்சியும் நாட்டில் ஏற்படுவதாக சொல்லப்படுகின்றது. அதேசமயம் பறிபோகும் வேலை வாய்ப்புகளின் அளவு புதிய வேலை வாய்ப்புகளும் உருவாகுவதாக அவதானிகள் கருதுகிறார்கள். 2030அளவில் இந்த ரோபோ பொருளாதாரம், சுமாராக 5 trillion தொகை டொலர்களை ஈட்டித் தரும் என்பது வல்லுனர்களின் இன்னொரு கணிப்பு.

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## போத்துக் கொண்டு பொலனறுவைக்குப் போக வேண்டியதுதானே? என்னவோ தெரியாது!

போதைப்பொருள் வியாபாரம் நடத்தியே தமிழர் ஆயுதப் போராட்டம் நடத்தினவை எண்ட ஜனாதிபதியின்ரை பேச்சாலை சுமந்திரன் சீற்றம் எண்ட செய்தியைப் பாத்தன். அது உண்மை'எண்டால் தானே கோவிக்க வேணும். கதைக்கக் கதை இல்லை எண்டு கதைக்கிறார் எண்டால்... ஏன்? ரணிலை வண்ணாத்தி எண்டும் சொன்னவர் தானே! பாருங்கோ அதுக்கு ரணில் சீறேல்லை. ஏனெண்டால் அது பொய்.

எனக்குத்தெரியாது ஏன் இவர் சீறுவான் எண்டு. நாக பாம்பு சீறுதெண்டு சாரையுஞ் சீறிச்சுதாம். எல்லாருக்குந் தெரியும் சாரை கடிக்காதெண்டு.அது சீறினாலும் பயமில்லை. சீறாட்டாலும் ஒருதரும் ஒண்டும் சொல்ல மாட்டினம். ஏனெண்டால் விடுதலைப் புலியளைப் பற்றி அவதூறாக் கதைக்கிறதிலை முதல் ஆள் சுமந்திரன். ஆனால் சீறினதுக்குப் பின்னாலை ஏதேன் லாபம் இருக்கும். அப்புக் காத்து ஏதாவது காரணமில்லாமல் சீறாது.

சரி போராட்டம் நடத்துறதுக்காகப் போதைப் பொருளைக் கடத்தினவையெண்டால், இப்ப கட்டுக் கட்டா, எந்த நாளும் யாழ்ப்பாணக் கடற்கரை கரைப் பிரதேச மெல்லாம் கஞ்சா பிடிபடுகிது. அப்ப அதை ஆர் கடத்தினமெண்டதைப் பிடிக்க வக்கில்லாத அரசாங்கத்திலை உவர் ஜனாதிபதியாம்.. அப்ப இப்பவும் யாழ்ப்பாணத்திலை போராட்டம் நடக்குதோ?

தேசிய போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தின்ரை கடைசி நாளண்டு ஜனாதிபதி ஏதாவது வித்தியாசமாச் சொல்ல வேணும் எல்லே? என்னத்துக்கும் தலையிலை மிளகாய் வைச்சரைக்கிறதுக்கு விடுதலைப் புலியள் இருக்கினம். எதுக்கெடுத்தாலும் புலியளையும் பூனையளையும் பழி சொல்லிறதுதான் சிங்களச் சனத்தின்ரை வேலையாப் போச்சுது!

புலியள் இருக்கேக்கை காடுகள் அழிக்கப்படாமல் பக்குவமாய் பாதுகாத்து வைச்சிருந்தவை எண்டு சொன்னதும் உந்தாள்தான். அதே ஜனாதிபதிதான் ஈஸ்ரர் குண்டு வெடிச்ச உடனை "புலியள் ஒரு கொள்கைக்காகப் போராடினவை" எண்டும் சொன்னவர். பாவம் அந்தாள். உப்பிடி இடைக்கிடை ஏதாவது சொல்லி மாட்டுப்பட்டுப் போயிடுவர். சல ரோகம் கூடினாலும் உப்பிடி மாத்தி மாத்திக் கதைப்பினமாம் எண்டு சனம் சொல்லுது. என்னெண்டு தெரியேல்லை. சீனி கூடினால் அறளைபெயருமாம். அப்ப அதுக்குப் போய் மருந்தெடுக்கிறதை விட்டிட்டு போயும் போயும் உப்பிடியே கதைக்கிறதே? ஒரு மனுசத்தன்மை வேண்டாம்.!

சரி அந்தாள்தான் தெரியாமல் கதைக்கிறார் எண்டால்... அதைச் சுமந்திரன் தன்ரை காதுக்கை வாங்கிப் போட்டுக் கொண்டு சீறினாராம்....சினந்தாரம் எண்டு பேப்பர் காரர் எழுத.... என்னைப் பொறுத்தவரை ஆரும் உதைப் போலை கதையைக் கேட்டுச் சும்மா நேரத்தை மினைக்கெடுத்திக் கொண்டு... சீறினாராம்.. சினந்தாராம் எண்டு ...... சிறு பிள்ளைத்தனமான ஒரு அரசியல். கேக்கச் சிரிப்பாக் கிடக்கு. வேலை வெட்டி இல்லாதவன் உப்பிடித்தானாம், செழிவான் நூலைப்பிடிச்சுத் தொங்குவனாம்.

திருவிளையாடல் படத்திலை நாகேஷ் சொன்ன மாதிரி..."பாட்டெழுதிப் பெயர் வாங்கும் புலவர்களும் இருக்கிறார்கள். மற்றவர்கள் எழுதும் பாட்டில் பிழைகள் கண்டு பிடித்துப் பெயர் வாங்கும் புலவர்களும் இந்த நாட்டில் இருக்கிறார்கள்." அந்த வகையில் சுமந்திரன் எந்தவகைப் புலவர் எண்டு சொல்லுங்கோ பாப்பம்? எண்டு மக்கள் கதைக்கினம்.

ஜனாதிபதிக்கும் கெட்ட காலம் போலை. எதுக்கெடுத்தாலும் ஆக்கள் கோட்டுக்குப் போகத் துவங்கிவிட்டினம். இப்பவும் பாருங்கோ... துக்குத் தண்டனைக்கு இடைக்காலத்தடை விதிக்கச் சொல்லிச் சனம் கோட்டுக்குப் போயிருக்கு. உடனடியாத் தூக்குத் தண்டனையை நிப்பாட்டட்டாம். பாப்பம் என்ன நடக்கப் போகுதெண்டு? இதிலையும் அவர் தோற்பாரெண்டால் மரியாதை கெட்ட வேலை. பிறகு ஆரின்ரை கண்ணிலை முழிக்கிறது? போத்துக் கொண்டு பொலனறுவைக்குப் போக வேண்டியதுதான்

தன்ரை பதவியை வைச்சுக் கொண்டு இந்த மனுசன் என்னென்னத்தை எல்லாம் செய்திருக்கலாம்? நாட்டையே அப்பிடியே மாத்திப் போட்டிருக்கலாம். குட்டிச் சிங்கப்பூரா மாத்தி இருக்கலாம்.இது அதை விட்டிட்டுச் செய்ததெல்லாம்... வெடி வெடிச்சானைப்போலை... ரிக்கு...ரிக்கு எண்டு வெடிச்சதுதான் மிச்சம். தனக்கும் ஒரு பிரயோசனமில்லை. நாட்டுக்கும் ஒரு பிரயோசனமில்லை. அடுத்து வாறதுக்காவது ஏதேன் உந்த ஆள் செய்திருக்கலாம். உது எல்லாத்தையும் கூழாம்பாணி ஆக்கி வைச்சிட்டுது. தன்ரை வாயாலே தான் கெட்டதுததான் மிச்சம். கடைசியா விசாரணைக் கொமிஷனுக்கு முன்னாலை போய் நிக்க வேண்டிக் கிடக்கு?

**- கோளரங்கன்**

## குற்றத்துக்கு...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைக்கப்படும் செய்தியைக் கண்டு கொண்டே அவனைத் தூக்கிலிடுங்கள் என்று நீங்கள் கூவும்பொழுதெல்லாம் உங்கள் கைகளிலும் இரத்தக் கறை படிந்துள்ளது என உணருங்கள்.

என்னை மிகவும் அச்சுறுத்துகிற வார்த்தைகள் 'தூக்கிலிடுங்கள்', 'என்கவுண்டர் செய்யுங்கள்' என்பவை. குற்றத்தின் எதிரொலிப்பாக இந்த வார்த்தைகள் உருவாகும்போது எனக்கு ஏற்படும் ஆச்சரியமெல்லாம் எப்படி இப்பொழுதும் உங்களால் குற்றத்தை ஒழிப்பது என்பதைத் தாண்டி இன்னொரு பலியை நம்மால் எதிர்நோக்க முடிகிறது என்பது குறித்துத்தான். ஏனெனில் நம் சமூகம் குற்றங்களால் நிரம்பியது. தினம்தோறும் ஏதோ ஒரு வடிவில் இவை நடந்து கொண்டே இருக்கின்றன.

அதன் அடிப்படைச் சிக்கல்களை நோக்கி நகராமல், மரண தண்டனை அளிப்பதால் இதைச் சரி செய்ய முடியும் எனக் கூச்சலிடுவது என்பது நமது கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடே அன்றி வேறு என்னவாக இருக்க முடியும்?

மரணம் என்பதை நோக்கிய 'கூட்டு மனசாட்சி' என்பதே நம்முள் இருக்கும் வன்முறையின் உச்சம் எனலாம். இந்த வன்முறையை நாம் தினசரி ஏதோ ஒரு வடிவில் வெளிப்படுத்திக் கொண்டேதான் இருக்கிறோம். ஏனெனில் நாம் நமது வாழ்வில் கடந்து செல்லும் வழியெங்கும் ஒரு பெருங்குற்றத்திற்கான சில விடயங்களை மிக எளிதாகக் கடந்திருப்போம். அது குறித்துப் பேசத் தொடங்கினால் எங்கே நாமும் குற்றத்தின் அடிப்படை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்குமோ என்பதன் நீட்சியாகவும் இந்தக் கூக்குரல்களைச் சொல்ல முடியும்.

இனி நமது உரையாடல் என்பதெல்லாம் நமது குற்றச்சமூகத்தின் அடிப்படைகளைப் புரிந்து கொண்டு அதற்கு எதிரான நடவடிக்கைகளை எவ்வாறு உருவாக்குவது என்பதாகத் தான் இருக்க வேண்டும். அதுவே நாம் உருவாக்க நினைக்கும் குற்றமற்ற சமூகம் என்கிற இலக்கை அடைவதற்கான சூழலை உருவாக்கும் எனலாம். ஏனெனில் விக்தோர் ஹ்யூகோ கூறுவது போல் நாமே நமது சமுதாயத்தைக் குற்றங்கள் நிறைந்த சூழலாக வைத்திருக்கிறோம். அதை மறைப்பதற்காக ஒரு உயிரைப் பலிகொடுத்து நாம் திருப்திப்பட்டுக் கொள்வதென்பது அந்தக் குற்றத்திற்கு துணைபோவதே அன்றி வேறு என்ன?

## இன்னொரு...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் அமைந்திருப்பதை சுட்டிக்காட்டுகிறார். மனிதமைய நோக்கின் காரணமாக, இந்தோ-ஆரிய மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டோரின் சிந்தனையில் கிழக்கு என்பது 'முன்' என்றும், மேற்கு என்பது 'பின்' என்றும் உணரப்படுகின்றன. இந்த உணர்வு சிந்துவெளி நகர அமைப்பில் வெளிப்படுவதில்லை என்பதை ஒப்பிட்டுக் காண்பிக்கிறார். சிந்துவெளி ஊர்ப் பெயர்களிலும் 'முன் - பின்' தடயம் காணப்படவில்லை. மாறாக, 'மேல் - கீழ்' பெயர்கள் ஏராளமாகத் தென்படுகின்றன என்ற உண்மையைப் புள்ளிவிவரப்படுத்தி அட்டவணைகள், அட்ச-தீர்க்க ரேகைகளுடன் வழங்குவது நூலின் நம்பகத்தன்மையை அதிகரிக்கின்றது. சிந்து வெளி குறித்து வெளிவந்த ஆய்வுகளில் தனிக்கவனம் பெறும் ஒன்றாக இந்நூல் உள்ளது.

# செய்வது சரிதானா...?

யாழவன்




"சொன்னது நீதானா? சொல் சொல்"....இப்படி ஒரு பழைய பாடல் தொடங்கும். ஆனால் இப்பொழுதோ இந்த வரிகளை மாற்றி "செய்வது சரிதானா? சொல் சொல்..." என்று பாடவேண்டி இருக்கின்றது. எல்லாமே இந்தத் தூக்குத் தண்டனை விவகாரம்தான்! மிகப் பிந்திய செய்தியாக அலுகோசு பதவிக்கு இருவர் தெரிவு என்ற தகவல் நமக்குக் கிடைத்துள்ளது. இரண்டு வாரப் பயிற்சியைப் பெற்றுள்ள இவர்கள், தம் கடமையை நிறைவேற்ற, எந்த நேரமும் தயார் என்றும் கூறியிருக்கிறார்கள். இதனிடையே தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதில், ஜனாதிபதி விடாக்கொண்டனாக இருக்கிறார்.

**செய்வது சரிதானா...?**

ஜனாதிபதி செய்வது சரிதானா என்ற விவாதம் இலங்கையில் மட்டுமல்ல, உலக நாடுகளிலும் எதிரொலிக்கத் தொடங்கியிருப்பதை நாம் அவதானிக்கலாம். பெரும்பான்மையானவர்கள் வேண்டாம் இந்தக் கொலைபாதகம் என்றே வாதிடுகிறார்கள். இலங்கையின் சுதந்திரக் கட்சி பச்சைக்கொடி காட்டுவதைப் போல, உள் நாட்டிலோ, வெளிநாட்டிலோ ஆதரவாகக் குரல் கொடுப்பவர்கள் பெரிதாக இல்லை என்பதே நிஜம்! தூக்கில் தொங்குபவர் நூற்றுக்கு நூறு வீதம் குற்றவாளி என்று உறுதிப்படுத்தப்பட்டால் பரவாயில்லை. ஆனால், எய்தவனிருக்க அம்பை நோகடிக்கலாமா என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். இவர்களும் கேட்கிறார்கள்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி ஈரானில் ஒரு 24 வயதுப் பெண்ணுக்கு மரண தண்டனை நிறைவேற்றி வைக்கப்பட்டது. 15 வயதில் திருமணமாகியவள் இந்தப் பெண். கணவனின் சித்திரவதைகள் ஒருபுறம்'இருக்க, மைத்துனனின் பாலியல் வன்புணர்வுக்கு பலமுறை உட்படுத்தப்பட்டவள் இந்த அபலைப் பெண். பலமுறை அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தும் நியாயம் இவளுக்கு கிடைக்கவில்லை. 17 வயதில் இவள் கணவன் இறந்து கிடக்க, பொலிஸார் சித்திரவதை செய்ய, இவள் கொலைக் குற்றத்தை தானே செய்ததாக ஒப்புக் கொண்டாள்.

இவளுக்கென ஒரு வழக்கறிஞர் நியமிக்கப்பட்டபோது, இவள் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தை மீளப் பெற்றிருந்தாள். தான் கொலையாளி அல்ல என்பதை வழக்கறிஞர் மூலம் வாதாட வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அதற்குள் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டது. இது உதாரணத்திற்கு சொல்லப்படும் ஒரு சம்பவம்தான். ஆய்வுகளின்படி உலக நாடுகளெங்கும், பல பெண்கள் பாலியல் ரீதியாகப் பேதம் காண்பிக்கப்பட்டு, அவசியப்படாத மரண தண்டனை பெற்றிருக்கிறார்கள். என்று புள்ளிவிரங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

அமெரிக்காவில் சாள்ஸ் ரே, கிளிபேஃர்ட் வில்லியம்ஸ் என்ற இருவருக்கும் அளிக்கப்பட்ட மரண தண்டனைகள். முறையே 43, 42 வருடங்களின் பின்னர் மீளப் பெறப்பட்டு, விடுவிக்கப்பட்டார்கள். இப்படி விடுவிக்கப்பட்ட 165, 166 ஆவது கைதிகள் இவர்கள் என்கின்றன புள்ளி விபரங்கள். இலங்கையில் மரணதண்டனைகள் பெறும் குற்றவாளிகள் வருடாவருடம் அதிகரித்துக் கொண்டே போகிறது. 2010இல் 96 பேர் மரண தண்டனை பெற 2017 இல் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 217. 1976இல் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனையின் பின்னர் இதுவரை எவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. கடந்த ஜூன் 26இல் ஜனாதிபதியின் அறிவிப்புடன் மீண்டும் மரண தண்டனை அமுலுக்கு வந்துள்ளது.

மரணதண்டனை ஏன் வேண்டாம் என்பதற்கு பல காரணங்களை முன்வைக்கலாம். ஒன்று முன்னரே குறிப்பிட்டபடி, மரண தண்டனை விதிக்கப்பட்டவர், உண்மையிலேயே இத் தண்டனைக்கு 100 வீதம் குற்றவாளியா எனக் கண்டறிவது.!அநியாயமாக ஒருவர் குற்றஞ் சாட்டப்பட்டு கொல்லப்படுவதோ அல்லது ஆண்டுகணக்கில் சிறைப் பறவையாக இருத்தி விட்டு விடுவிப்பதும் மகா அபத்தம். மரணதண்டனை குற்றச் செயல்களை குறைக்கும் அல்லது தடுக்கும் என்பதற்கு இலங்கையிலோ அல்லது உலக நாடுகளிலோ எந்த வித ஆதாரங்களும் இல்லை. அப்படியானால் ஜனாதிபதி எடுத்த முடிவு தவறா? மீண்டும் அதே கேள்வி!

இதை இன்னொரு கோணத்தில் பார்ப்போமே. இன்றைக்கு ஒக்டோபஸ் போல இலங்கை முழுவதும் தன் கால்களைப் பரப்பி, முதலைப் பிடியாக, போதைவஸ்து பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்றது. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று நான்கு திசைகளிலும் கஞ்சா கடத்தல்கள் மும்முரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக கேரள கஞ்சா என்பது பெருவாரியாக தினமும் வெவ்வேறு இடங்களில், கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்படுகின்றது. இலங்கை , கடத்தல்களுக்கு ஒரு கேந்திர ஸ்தானமாகி விட்டதே காரணம். சிறைக்குள் தள்ளினாலும் அங்கிருந்தும் கைதிகளுக்கு கடத்தலைத் தொடர முடிகின்றது. புற்றுநோய் எப்படி உடல்முழுவதும் பரவுமோ அப்படி பரவியுள்ளது இந்தக் கடத்தல் விவகாரம். ஒருவன் கொலை செய்யப்படும்போது பறிபோவது ஓர் உயிர் மாத்திரமே! ஆனால் இங்கேயோ சமுதாயம் சீரழிக்கப்படுகின்றது. வதைபடுகின்றது. அணுஅணு வாகக் கொல்லப்படுகின்றது. புத்தகமும் கையுமாக திரிய வேண்டியவர்கள் போதைவஸ்தும் கையுமாக திரிகின்ற அவலம், எங்கள் சமுதாயத்தின் குரல்வளையை நெருக்குகின்றது.

என்ன செய்ய முடியும்? இயக்குபவன் ஒருவன் இருக்க அநியாயமாக வேறு தலைகள் உருள வேண்டுமா என்று கேட்கிறார்கள். நியாயம்தான். ஆனால் இப்படியே விட்டுவைத்தால் அறுதியில் எஞ்சுவது வெறும் பூச்சியம்தான். எனவே இந்த மரண தண்டனைகள் மூலம் அம்புகளை மழுங்கடித்தால், புதிய புதிய அம்புகள் வெளிவரத் தயங்கும். மரண பயம் தொற்றும் என்று நினைக்கிறார் ஜனாதிபதி. அப்படித்தான் எமக்கும் நினைக்கத் தோன்றுகிறது. இது தீர்வைக் கொண்டுவருமா என்பது ஒருபுறமிருக்க, இது பின்புலத்தில் நின்று ஆட்டுவிக்கும் அரசியல்வாதிகளை ஆட்டங்காண வைக்க உதவக்கூடும்.

மரண பயம் என்பது இலேசுப்பட்டது அல்ல. வளைகுடா நாடுகளில் குற்றச் செயல்கள், மரணதண்டனைகளால் முற்றாக அழிக்கப்படாத நிலை இருந்தாலும், கைகளை வெட்டுவது, கிரேனில் மக்கள் கூடும் இடங்களில் தூக்கிலிடுவது, சிரச்சேதம் செய்து தலை உருள்வது குற்றவாளிகளுக்கு ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தி இருப்பதை எவருமே மறுக்க முடியாது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இலங்கை உட்பட 121 நாடுகள் ஐ.நா. சபையில் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று ஒருமித்து குரல் கொடுத்திருந்தார்கள். மரண தண்டனை நிறைவேற்றுவதை நிறுத்தியுள்ள நாடுகள் அதைத் தொடரவேண்டுமெனவும் கோரியிருந்தார்கள். இதே சமயம் சமீபத்தில் மலேசிய அரசு மரணதண்டனையை முற்றாக ஒழிக்கப் போவதாக அறிவித்து இருந்தது. 170 உலக நாடுகள், மரண தண்டனை அளிப்பதை முற்றாக நிறுத்தி விட்டதாகவோ அல்லது நிறுத்தப் போவதாகவோ முடிவெடுத்துள்ளன. "அம்னெஸ்டி இன்ரர்நஷனல்" அமைப்பின் அறிக்கையின்படி 2018இல் குறைந்த பட்சம் 690 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இது 2017உடன் ஒப்பிடும்போது 33 வீதம் குறைந்த (993) தொகை என்பது குறிப்பிடத்தக்கது. உலக நாடுகளெங்கும் குறைந்த பட்சம் 19,336பேர் , 2018 முடிவில் மரண தண்டனை பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

நண்பர் ஒருவர், மரத்தின் அடி பருத்து வளர, கிளைகளைத் தறித்து எறிவது என்ன பலனைத் தரப்போகின்றது. "தில்" இருந்தால், அடிமரத்தை வெட்டட்டுமே அரசு என்கிறார் அவர். உண்மைதான். தமக்குள் அடிபடவே நேரம் போதாத அரசுக்கு, இதற்கு எங்கே நேரம் கிடைக்கப் போகின்றது?




# கிரிக்கெட்

2015 உலகக் கிண்ணத் தொடரில் சங்ககார 7 போட்டிகளில் மொத்தம் 541 ஓட்டங்களைக் குவித்தாலும் அதில் 4 சதங்களை அவர் தொடர்ச்சியாகப் பெற்றதே சாதனையாக விளங்கியது. இந்த உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பித்த பிற்பாடு ஊடகம் ஒன்று அவரிடம் இந்தச் சாதனையை தற்போது உலகக் கிண்ணத் தொடரில் யார் முறியடிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது எனக் கேட்டிருந்தது. அதற்கு அவர் விராத் கோலி எனப் பதிலளித்திருந்தார். ஆனாலும் விராத் கோலியால் தொடர்ச்சியாக 5 அரைச்சதங்களைப் பெற முடிந்ததே தவிர ஒரு சதத்தைத் தானும் பங்களாதேஸ் உடனான போட்டி வரை அவரால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் சங்காவின் கணிப்புக்கு மாறாக அவரின் சாதனையை ரோகித் சர்மா பங்களாதேஸ் உடனான போட்டியில் சமப்படுத்தியிருந்தார்.

இதன்மூலம் ரோகித் சர்மா உலகக் கிண்ணத் தொடரில் குறைந்த(15) இனிங்ஸ்களில் 5 சதங்களை எட்டிய சாதனையையும் பேர்மிங்ஹாம் மைதானத்தில் தொடர்ச்சியாக மூன்று சதங்களை அடித்த ஒரே வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார். முன்னதாக இங்கிலாந்துக்கெதிரான இந்த உலகக் கிண்ணப் போட்டியிலும் 2017 சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்களாதேஸ் அணிக்கெதிரான போட்டியிலும் ரோகித் சர்மா சதங்கள் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

• • •

1996 உலகக் கிண்ணத்தில் சனத் ஜெயசூரியவும் (221 ஓட்டங்கள், 7 விக்கெட்டுகள்) 2011 உலகக் கிண்ணத்தில் யுவராஜ்சிங்கும் (362 ஓட்டங்கள், 15 விக்கெட்டுகள்) தொடர் நாயகன் விருதைப் பெற்றுக்கொண்டதற்கு அவர்கள் சகலதுறை வீரர்களாக ஜொலித்ததோடு உலகக் கிண்ணத்தை இலங்கையும் இந்தியாவும் கைப்பற்றியதும் பிரதான காரணமாக விளங்கியது. ஆனாலும் 1999 உலகக் கிண்ணத்தில் தென்னாபிரிக்காவின் லான்ஸ் குளுஸ்னர் 281 ஓட்டங்களையும் 17 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியதோடு அணியும் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியதனாலேயே தொடர்நாயகன் விருது கிடைத்தது. அந்தவகையில் இந்த உலகக் கிண்ணத்தில் சகிப் அல் ஹசன் இந்தியாவுடனான போட்டிவரையில் 542 ஓட்டங்களையும் 11 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி சகலதுறையிலும் ஜொலித்தாலும் பங்களாதேஷ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெறாதமை அவரின் தொடர் நாயகன் விருதைக் கேள்விக்குரிய தாக்கி உள்ளது. இப்பத்தி எழுதும் வரை இந்திய, அவுஸ்ரேலிய அணிகள் அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ள நிலையில் தொடர்நாயகன் விருது இம்முறை அதிக ஓட்டங்களைக் குவித்து முன்னிலை வகிக்கும் ரோகித் சர்மா, டேவிட் வோணர், ஆரோன் பின்ஞ் ஆகியோரில் ஒருவருக்கோ அல்லது அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய மிட்செல் ஸ்ராக்குக்கோ கிடைக்க அதிக வாய்ப்பிருக்கிறது.



# உதைபந்தாட்டம்



கோபா அமெரிக்க உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நாளை (07.07.2019) நடைபெறவுள்ள நிலையில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள போட்டிகளை ஆர்ஜென்ரீனாவும் கொலம்பியாவும் இணைந்து நடத்துமென தென்னமெரிக்க உதைபந்தாட்டக் கூட்டமைப்பு கடந்தவாரம் அறிவித்துள்ளது. 12 நாடுகள் பங்குபற்றும் இந்தத் தொடர் 2020 ஆம் ஆண்டு ஜூன் 12 - ஜூலை 12 வரை நடைபெறவுள்ளது. இம்முறை சிறப்பு அழைப்பாளர்களாக ஆசிய நாடுகளான ஜப்பானும் கட்டாரும் அழைக்கப்பட்டதைப் போன்று அடுத்தவருடப் போட்டிகளுக்கு கட்டாரும் அவுஸ்ரேலியாவும் அழைக்கப்படவுள்ளன.

கடந்த சில வருடங்களாகவே கோபா அமெரிக்க இறுதிப் போட்டியை இரண்டு லெக் ஆட்டங்களாக நடத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் பலராலும் முன்வைக்கப்பட்டிருந்தது. அதாவது இறுதிப் போட்டியில் பங்குபற்றுகின்ற இரண்டு நாடுகளிலும் தலா ஒவ்வொரு இறுதிப்போட்டியை நடத்த வேண்டும் என்பதாக. ஆனாலும் கடந்தவாரம் நடைபெற்ற கூட்டத்தில் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு இறுதிப்போட்டி கொலம்பியாவில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

• • •

32 ஆவது ஆபிரிக்கக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் தற்போது எகிப்தில் நடைபெற்று வருகின்றன. முன்னதாக இப்போட்டிகள் கமரூனில் நடத்துவதற்கே ஆபிரிக்க உதைபந்தாட்டச் சம்மேளனம் அனுமதி வழங்கியிருந்தது. இதன்மூலம் 1972ஆம் ஆண்டுக்கு பின்னர் முதல் தடவையாக இப்போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்பு கமரூனுக்கு கிடைத்தாலும் மைதானக் கட்டமைப்புப் பணிகளை குறிப்பிட்ட காலத்தினுள் கமரூனால் பூர்த்திசெய்ய முடியாது போனதால் இந்தப் போட்டிகள் எகிப்துக்கு மாற்றப்பட்டிருந்தன. அத்தோடு இந்தத் தொடர் முன்னதாக ஜூன் 15 - ஜூலை 13 ஆம் திகதி வரை நடத்தப்பட இருந்தாலும் ரமலானை முன்னிட்டு ஜூன் 21 - ஜூலை 19 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இத்தொடரின் நடப்புச் சம்பியனாக கமரூன் விளங்கினாலும் அதிகபட்சமாக ஆபிரிக்கக் கிண்ணத்தை எகிப்தே 7 தடவைகள் கைப்பற்றியுள்ளது. 24 நாடுகள் பங்குபற்றிய இந்தத் தொடரின் நொக்கவுட் சுற்றுப் போட்டிகள் நேற்றைய தினம் (05.07.2019) ஆரம்பமாகின.





# ரென்னிஸ்

தற்போது லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் விளையாடி வரும் அமெரிக்க வீராங்கனையான கோரி கௌவ் தனது முதற் போட்டியை அமெரிக்க வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸு டன் விளையாடி நேர் செற்களில் வென்றிருந்தார். இந்தப் போட்டியில் உள்ள சிறப்பு என்னவென்றால் இந்தத் தொடரில் விளையாடிய வீனஸ் வில்லியம்ஸுக்கு தற்போது 39 வயதாகும். அதுபோல கோரி கௌவ்விற்கு தற்போது 15 வயதாகும்.

அந்தவகையில் இந்தத் தொடரில் அதிகூடிய வயது வீராங்கனையும் அதிகுறைந்த வயது வீராங்கனையும் விளையாடிய போட்டியாக இது விளங்கியமை தான். கோரி கௌவ்வினுடைய ஆதர்சமாக விளங்குபவரே வீனஸ் வில்லியம்ஸ்தான். 2004 ஆம் ஆண்டு கோரி கௌவ் பிறப்பதற்கு முன்னதாகவே வில்லியம்ஸ் சகோதரிகள் 10 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றிருந்தார்கள். அவர்களது விளையாட்டை தொலைக்காட்சியில் பார்த்து வளர்ந்த கோரி கௌவ் இன்று வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்தி ரென்னிஸ் உலகையே தன் பக்கம் ஈர்த்துள்ளார். கடந்த வருடம் நடைபெற்ற பிரெஞ் ஓப்பன் ஜூனியர் தொடரில் கோரி கௌவ் சம்பியன் பட்டம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

• • •

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் அவுஸ்ரேலியன் ஓப்பன், விம்பிள்டன், அமெரிக்க ஓப்பன் தொடர்கள் புற்தரையில் ஆடப்படும் போட்டிகளாகவும் பிரெஞ் ஓப்பன் தொடர் மட்டும் களிமண் தரையில் ஆடப்படும் போட்டியாகவும் காணப்படுகின்றது. இவற்றில் அவுஸ்ரேலியன் ஓப்பன், பிரெஞ் ஓப்பன், அமெரிக்க ஓப்பன் தொடர் ஆகியவற்றில் வீரர்களைத் தரவரிசைப்படுத்தும் பொழுது ஏ.ரி.பி உலக தரவரிசையை அடிப்படையாகக் கொண்டே கணிப்பிடப்படுவது வழக்கம். ஆனால் விம்பிள்டன் தொடர் மட்டும் புற்தரைப் ஆடுகளங்களில் விளையாடப்படும் போட்டிகளை மட்டும் கருத்திற்கொண்டு தரவரிசையைக் கணித்து வருகின்றது.

இது தற்போது ஏ.ரி.பி உலக தரவரிசையில் 2ஆம் இடத்தில் உள்ள களிமண் தரையின் முடிசூடா மன்னனர்க விளங்கும் ரபெல் நடாலுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து நடால் 'விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் தொடரில் மட்டுமே இது போன்று தரநிலை ஒதுக்கப்படுகிறது. நான் 3ஆவது தரநிலைக்குப் பதிலாக 2ஆவது இடம் பிடித்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் எனக்கு 3ஆவது இடம் கொடுத்துள்ளார்கள். இருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு கடுமையாகப் போராட வேண்டும். நான் தொடரில் வெற்றி பெறுவேன்' எனத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 06.07.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.